இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 21 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 13 – புதன்கிழமை 30 ஆகஸ்ட் 2023 – வெளியூர் 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 21: Thiruvalluvar Year - 2054 - Aavani 13 - Wednesday 30 August 2023 - Dak 10 Pages ₹ 5.00

### குறுவை சாகுபடி பயிரைக் காப்பாற்ற

# காவிரியில் வினாடிக்கு 24 ஆயிரம் கனஅடி நீரை திறந்துவிட வேண்டும்!

## நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் வலியுறுத்தல்!

**சென்னை, ஆக. 30 -**

**டெல்லியில் காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டம் நடைபெற உள்ள நிலையில், குறுவை சாகுபடி பயிரை காப்பாற்ற தொடர்ந்து வினாடிக்கு காவிரியில் 24 ஆயிரம் கன அடி நீர் திறந்து விட கர்நாடகாவுக்கு உத்தரவிட வேண்டுமென்று தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் வலியுறுத்தியுள்ளார். சென்னை கோட்டூர்புரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நிலுவையில் உள்ள தண்ணீரை 15 நாட்களுக்குள் திறந்துவிட வேண்டும் என்று அவர் கூறினார்.**

காவிரி மேலாண்மை ஆணையத்தின் 22வது கூட்டம் கடந்த 11ந்தேதி டெல்லியில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில், “தமிழ்நாட்டுக்கு முறைப்படி திறந்து விடவேண்டிய தண்ணீரை கர்நாடகம் திறந்து விடவில்லை. அதுகுறித்த உத்தரவுகளை கர்நாடக அரசுக்கு ஆணையம் பிறப்பிக்க வேண்டும்” என தமிழக அதிகாரிகள் வலியுறுத்தினார்கள். ஆனால் கர்நாடக அதிகாரிகள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் தமிழக அதிகாரிகள் வெளிநடப்பு செய்தனர். இதற்கிடையே, வினாடிக்கு 10 ஆயிரம் கனஅடி வீதம் 37.9 டி.எம்.சி தண்ணீரை தமிழ்நாட்டுக்கு கர்நாடகம் திறந்துவிட வேண்டும் என ஆணையம் உத்தரவிட்டது.

ஆனாலும் கர்நாடக அரசின் போக்கை எதிர்த்து தமிழ்நாடு அரசு, சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தது. கடந்த 25ந்தேதி வழக்கை நீதிபதிகள் விசாரித்த போது, காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவுகளை கர்நாடக அரசு எந்த வகையில் நடைமுறைப்படுத்தி இருக்கிறது? என்ற விவரத்தையும், கர்நாடக அணைகளின் நீர் இருப்பு விவரங்களையும் செப்டம்பர் 1ந் தேதிக்குள் அறிக்கையாக தாக்கல் செய்ய மேலாண்மை ஆணையத்துக்கு உத்தரவிட்டனர்.

அதுமட்டுமின்றி தமிழ்நாட்டுக்கு திறந்து விடப்படும் நீரின் அளவை குறைக்க அனுமதி கோரி மேலாண்மை ஆணையத்தில் கர்நாடக அரசு அளித்த மனு மீதும், ஆணையம் உத்தரவிட்ட நீரின் அளவு போதுமானதல்ல என்று தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த மனு மீதும் காவிரி மேலாண்மை ஆணையம் விசாரித்து முடிவு எடுக்க வேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவு பிறப்பித்து இருந்தனர். இந்த உத்தரவின் அடிப்படையில் முடிவு எடுப்பதற்காக காவிரி மேலாண்மை ஆணையம் இன்று கூடுகிறது.

**அமைச்சர் துரைமுருகன் பேட்டி!**

இந்த நிலையில் இது தொடர்பாக செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் துரைமுருகன், காவிரியில் வினாடிக்கு 24 ஆயிரம் கன அடி தண்ணீர் திறக்க உத்தரவிட காவிரி மேலாண்மை ஆணையத்தில் வலியுறுத்தப்படும் வினாடிக்கு 5 ஆயிரம் கன அடி நீர் திறந்து விட வேண்டும் என காவிரி ஒழுங்காற்று ஆணையம் கூறியது போதாது. 45 டி.எம்.சி. நிலுவை தண்ணீரை கர்நாடக அரசு உடனடியாக திறந்து விட ஆணையத்தில் வலியுறுத்தப்படும். தமிழ்நாட்டுக்கு விநாடிக்கு 24 ஆயிரம் கன அடிநீர் கிடைத்தால்தான் நன்றாக இருக்கும். தமிழ்நாட்டின் கோரிக்கையை நீர்வளத்துறை செயலாளர் கூட்டத்தில் வலியுறுத்துவார் என தெரிவித்தார்.



முன்னதாக டெல்லியில் நீர் வள அமைச்சகத்தில் காவிரி ஒழுங்காற்று குழு கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது. இதில் தமிழ்நாடு, கர்நாடகா, புதுச்சேரி, கேரளா மாநில அதிகாரிகள் காணொலி வாயிலாக பங்கேற்றனர். இக்கூட்டத்தில் காவிரியில் 24 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்க தமிழ்நாடு அரசு வலியுறுத்தி இருந்தது. அதன் தொடர்ச்சியாக, காவிரியில் ஏழாயிரத்து 500 கனஅடி தண்ணீர் திறக்க உத்தரவிட காவிரி ஒழுங்காற்றுக்குழு கூட்டம் காவிரி மேலாண்மை ஆணையத்துக்குப் பரிந்துரைத்துள்ளது.

இந்நிலையில், காவிரி மேலாண்மை ஆணையத்தின் கூட்டம் நேற்று (29.08.2023) பிற்பகல் நடைபெற்றது. ஜுன், ஜுலை மாதத்தில் தமிழ்நாட்டுக்கு திறந்துவிட வேண்டிய 28 டி.எம்.சி நீர், ஆகஸ்ட் மாதத்துக்கான 45 டி.எம்.சி. நீர் முழுமையாகத் திறந்து விடப்படாமல் உள்ளது.

இதுவரை நிலுவையில் உள்ள 54 டி.எம்.சி. நீரை அடுத்த 15 நாட்களுக்குள் திறந்து விட வேண்டும். அதற்கு ஏற்ப வினாடிக்கு 24000 கனஅடி தண்ணீர் திறக்க வேண்டும் என காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் தமிழ்நாடு அரசு கோரிக்கை வைத்தது.

இதுதவிர செப்டம்பர் மாதத்துக்கான 36.76 டி.எம்.சி தண்ணீரையும் உரிய நேரத்தில் திறந்து விடவும் வலியுறுத்திவுள்ளது. நேற்றைய கூட்டத்தில் தமிழ்நாட்டுக்கு கூடுதல் தண்ணீர் திறக்க காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகள் உச்சநீதி மன்றத்தில் அறிக்கையாக காவிரி ஆணையம் தாக்கல் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





தமிழ்நாடு முதலமைச்சர். மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (29.08.2023) தலைமைச் செயலகத்தில், இங்கிலாந்து நாட்டின் அமஸ்பரி (Amesbury) மேயரான தமிழ்நாட்டை பூர்வீகமாக கொண்ட டாக்டர் சாருலதா (எ) மோனிகா தேவேந்திரன் சந்தித்துப் பேசினார். அவரது பெற்றோர் தேவேந்திரன், திருமதி கீதா தேவேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

## கொளத்தூர் தொகுதியில் முதலமைச்சர் இன்று ஆய்வு!

சென்னை, ஆக. 30 –

கொளத்தூர் தொகுதிக்கு இன்று (30.8.2023) செல்லும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் உதவி ஆணையர் அலுவலகத்திற்கு அடிக்கல் நாட்டுகிறார்.

தொடர்ந்து நீர்வள ஆதாரத்துறையின் மூலம் தணிகாச்சலம் கால்வாயினை அகலப்படுத்தி மேம்படுத்தும் பணியையும் தொடங்கி வைக்கிறார். மேலும், மாநகராட்சி பூங்காவில் மழை நீர் அமைத்து சேகரிக்கும் மையம் மேம்படுத்தும் பணியை தொடங்கி வைப்பதோடு, திரு.வி.க. நகர் பஸ் நிலையம் அருகில் நடைபெறும் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்கிறார். அதன் பிறகு மாணவ–மாணவியருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

### பரனூர் சுங்கச்சாவடி நவீன ஊழலின் அடையாளம்!

# வாகனங்களுக்கு கட்டணம் வசூலிப்பதில் பெரும் மோசடி!

## சி.ஏ.ஜி. அறிக்கையில் அம்பலம்!

செங்கல்பட்டு, ஆக. 30 -

ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஏழுரை லட்சம் கோடிக்கான ஏழு ஊழல்களை அம்பலப்படுத்தி, பெரும் பூகம்பத்தை உருவாக்கியுள்ளது சி.ஏ.ஜி.. அதில் ஒன்று சுங்கச்சாவடி ஊழல். சுங்கச்சாவடிகளில் இரண்டு வகை உண்டு. ஒன்று பொதுப் பணத்தில் அமைக்கப்பட்ட சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகள். இரண்டாவது, தனியார் பணத்தில் அமைக்கப்பட்ட சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகள்.

செங்கல்பட்டு பரனூர் சுங்கச்சாவடி, பொதுப் பணத்தில் அமைக்கப்பட்ட சுங்கச்சாவடியாகும். அதன் வழியாக 2019 ஆகஸ்ட் மாதத்திலிருந்து 2020 ஜுன் மாதம் வரையிலான காலத்தில் 1 கோடியே 17 லட்சத்து 8 ஆயிரத்து 438 வாகனங்கள் கடந்து சென்றுள்ளன. ஒரு கோடிக்கும் அதிகமான வாகனங்கள் பயணித்துள்ளன. இவற்றில் 62 லட்சத்து 37 ஆயிரத்து 152 வாகனங்கள் சுங்கக்கட்டணம் செலுத்தாமல் சென்ற முக்கிய பிரமுகர்களின் வாகனங்களாகும். பரனூர் சுங்கச்சாவடி மட்டுமல்ல. பொதுப் பணத்தில் அமைக்கப்பட்ட ஆத்தூர் சுங்கச்சாவடியில் 36 சதவீதம். 2020 ஜனவரி மாதம் முதல் 2020 செப்டம்பர் வரையிலான காலக்கட்டத்தில் கப்பலூர் சுங்கச்சாவடியில் 25 சதவீதம், லம்பாலகுடி சுங்கச்சாவடியில் 18 சதவீதம் என முக்கிய பிரமுகர்களின் வாகனங்கள் கட்டணம் செலுத்தாமல் பயணித்துள்ளன.

ஆனால் தனியார் சுங்கச்சாவடியில் இந்த கணக்கு தலைகீழாக உள்ளது. செங்குறிச்சி சுங்கச்சாவடியில் 2020 ஜனவரி முதல் 2020 செப்டம்பர் வரை கடந்து சென்ற வாகனங்கள் 49 லட்சத்து 77 ஆயிரத்து 901. அவற்றில் கட்டணம் கட்டாத முக்கிய பிரமுகர்களின் வாகனங்கள் 12.60 சதவீதம். கணியூர் சுங்கச்சாவடியில் 11 புள்ளி 12 சதவீதம். வேலன் செட்டியூர் சுங்கச்சாவடியில் 7 புள்ளி 13 சதவீதம். பாளையம் சுங்கச்சாவடி யில் 6 புள்ளி 93 சதவீதம். வைகுண்டம் சுங்கச்சாவடியில் 6 புள்ளி 76 சதவீதம். கொடைரோடு சுங்கச்சாவடியில் 6 புள்ளி 6 சதவீதமாகும்.

பொதுப்பணத்தில் அமைக்கப்பட்ட சாலையான பரனூர் சுங்கச்சாவடியில் 53 சதவிகிதம் முக்கிய பிரமுகர்கள் பயணம் செய்கிறார்கள். அதுவே தனியார் பணத்தில் அமைக்கப்பட்ட கொடைரோடு சுங்கச்சாவடியில் 6 சதவிகிதம் தான் என்றால் எவ்வளவு பெரிய முறைகேடு அரங்கேறி இருக்கிறது. ஆனால் முக்கிய பிரமுகர்கள் சென்றார்கள் என்பதற்கு எந்த ஆதாரமும் சேகரிக்கப்படவில்லை. பதிவுகள் கூட செய்யப்படவில்லை என சி.ஏ.ஜி அறிக்கை சொல்கிறது.

பொதுப் பணம் மற்றும் தனியார் சுங்கச்சாவடிகள் இரண்டிற்கும் விதிகள் ஒன்றுதான். விதிகளை நிறைவேற்றுகிறார்களா என்பதை பார்க்க வேண்டிய பொறுப்பு நெடுஞ்சாலை அமைச்சகத்திற்கு இல்லையா? அரசுக்கு இழப்பு இல்லை என்பது உண்மையா? வாங்கி விட்டு மறைத்தார்களா? வருவாய் வாய்ப்புகளை வைத்துதானே தனியார்களுக்கு வசூல் பொறுப்பு ஒப்படைக்கப்படும்! அப்படி என்றால் எத்தனை மடங்கு தொகையை இவர்கள் வாரிசுருட்டி உள்ளனர் என விமர்சனங்கள் முன்வைக்கப்படுகிறது. 11.09.1956க்கு பின்னால் கட்டப்பட்ட பாலங்களில் செல்வதற்குத் தான் சுங்கக் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும்.

ஆனால் பரனூர் சுங்கச்சாவடி பாலம் ஒன்றின் வழி பயணத்திற்கு 2018 முதல் 2021 வரை 22 கோடியே 10 லட்ச ரூபாய் வசூலிக்கப்பட்டிருப்பதையும் அம்பலப்படுத்தியுள்ளது சி.ஏ.ஜி. அறிக்கை. பரனூர் சுங்கச்சாவடி, சி.ஏ.ஜி. அறிக்கையால் பலவகையிலும் வரலாற்றுச் சிறப்பு மிக்க சுங்கச்சாவடியாக மாறியுள்ளதாக சாடியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், உலகத்திலேயே 50 சதவிகித முக்கிய பிரமுகர்கள் பயணம் செய்யும் பெருமை கொண்ட பரனூர் டோல்கேட்டை, நவீன ஊழலின் அடையாளமாக “பா.ஜ.க. மாடல் டோல்கேட்” என்றே அழைக்கலாம் என விமர்சித்துள்ளார்.

### குழந்தைகள் கல்வி முன்பணத் தொகை

# அரசு ஊழியர்களுக்கு 20 மடங்காக உயர்வு!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு! அரசு ஊழியர்கள் மகிழ்ச்சி!

*சென்னை, ஆக. 30 -*

*தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு கல்விக்கான முன்பணம் ரூ.50,000 முன்பணம் என நிர்ணயித்து 20 மடங்காக உயர்த்தி மெகா அறிவிப்பு ஒன்றை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது. இச்செய்தி அறிந்ததும் அரசு ஊழியர்கள் மகிழ்ச்சி தெரிவித்து இனிப்பு வழங்கி மகிழ்ந்தனர்.*

*அரசு ஊழியர்களின் குழந்தைகள் கல்வி கற்பதற்கான கல்வி முன்பணம் தொகை குறித்து தமிழக அரசு முக்கிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது. மூன்று விதமான கல்லூரிகளுக்கு எவ்வளவு தொகை உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது என விரிவாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பால் தமிழக அரசு ஊழியர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.*

*தமிழக அரசு ஊழியர்களுக்கு மகிழ்ச்சியூட்டும் வகையில் ஓர் அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதாவது, அரசு ஊழியர்களின் குழந்தைகள் கல்வி கற்பதற்கான கல்வி முன்பணம் உயர்த்தி அறிவிக்கப்பட்டிருக்கிறது.*

**உயர்கல்விக்கு முன்பணம்!**

*முன்னதாக 13.06.1979ல் பிறப்பிக்கப்பட்ட அரசாணையின் படி கல்விக்கான முன்பணம் 1,000 ரூபாய் எனவும், பல்தொழில்நுட்ப கல்வி பயில்வதற்கு 500 ரூபாய் எனவும் முன்பணம் வழங்கப்பட்டு வந்தது. அதன்பிறகு 1,000 ரூபாயில் இருந்து 1,500 ரூபாயாகவும், 500 ரூபாயில் இருந்து 750 ரூபாயாகவும் 01.12.1988ல் அரசாணை வெளியிடப்பட்டது.*

*இந்த அரசாணை வெளியிடப்பட்டு 30 ஆண்டுகள் கடந்து விட்டன. எனவே அரசு ஊழியர்களின் நலனை கருத்தில் கொண்டு, அவர்களது குழந்தைகள் கல்வி கற்க வழங்கப்பட்டு வந்த இந்த குறைந்த கல்வி முன்பணம் தமிழக அரசால் தற்போது உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. உயர்த்தப்பட்ட கல்வி முன்பணத் தொகை ஆனது நடப்பு 2023 - 2024ஆம் கல்வியாண்டில் இருந்து வழங்கப்படும். அதேசமயம் சில நிபந்தனைகளும் விதிக்கப்பட்டுள்ளன.*

**இரண்டு நிபந்தனைகள்**

- *தொகுதி ‘சி’ மற்றும் ‘டி’ ஊழியர்களுக்கு ஒரு மாத அடிப்படை சம்பளத்திற்கு சமமான தொகை அல்லது அதற்கு கீழே பரிந்துரைக்கப்பட்ட வரம்புகளில் எது அதிகமோ அந்த தொகை அனுமதிக்கப்படும்.*
- *தொகுதி ‘ஏ’ மற்றும் ‘பி’ அலுவலர்களுக்கு ஒரு மாத அடிப்படை சம்பளத்தில் 50 சதவீதம் அல்லது அதற்கு கீழே பரிந்துரைக்கப்பட்ட வரம்புகளில் எது அதிகமோ அந்த தொகை அனுமதிக்கப்படும்.*

*இதன்படி தொழில்முறை கல்விக்கு முன்பு ரூ.2500 வழங்கிய நிலையில் தற்போது ரூபாய் 50 ஆயிரம் வரையிலும், கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு முன்பு ரூ.2000 வழங்கிய நிலையில் தற்போது ரூ.25,000 வரையிலும் பல்தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பு 1000 ரூபாய் வழங்கிய நிலையில் தற்போது 25,000 வரையிலும் வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.*

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 30-08-2023

# ஏன் பதறுகிறார் பழனிசாமி?

**‘கொடநாடு’ என்று சொன்னாலே ‘கொல நடுக்கம்’ ஏற்படுகிறது பழனிசாமிக்கு. அதிகமாகப் பதறுகிறார் பழனிசாமி. எதற்காக அவர் பதற வேண்டும்?**

**‘எனக்குத் தெரிந்த உண்மைகளைச் சொல்லத் தயார்’ என்று என்றாவது சி.பி.சி.ஐ.டி. வாசலுக்கு அவர் வந்திருந்தால் அவரை நம்பலாம். ஆனால், அவரது பதற்றமே அவர் மீதான சந்தேகத்தை அதிகப்படுத்துகிறது.**

ஜெயலலிதாவின் கார் ஓட்டுநரான கனகராஜின் அண்ணன் தனபால் ஊடகங்களுக்கு பேட்டி அளித்துள்ளார். அந்தப் பேட்டியைப் பார்த்ததும் பழனிசாமியின் பிபி எகிறுகிறது.

**“கொடநாடு கொலை, கொள்ளை, மர்ம மரணங்கள் தொடர்பாக எடப்பாடி பழனிசாமியிடம் விசாரணை நடத்த வேண்டும். கொடநாட்டில் இருந்து 5 பைகள் நிறைய ஆவணங்களை எனது தம்பி கனகராஜ் கொண்டு வந்தார். பெருந்துறையில் வைத்து அதனை என்னிடம் காண்பித்தார். அதில், 3 பை சங்ககிரிக்கும், 2 பை சேலத்திற்கும் எனது தம்பி எடுத்துச் சென்று கொடுத்தார். அப்போது சயானும் உடனிருந்தார். எடப்பாடி பழனிசாமி சொல்லித்தான் இதனை எனது தம்பி செய்தார். ஆனால் எனது தம்பியை பலிகடாவாக்கி விட்டனர். தற்போது எனது உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. எனவே போலீஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும்**” என்று கேட்கிறார் கனகராஜின் அண்ணன் தனபால். இவர் சொல்வது உண்மையோ பொய்யோ நமக்குத் தெரியாது. பழனி சாமிக்குத்தான் தெரியும். அவர்தான் முழு உண்மையைச் சொல்ல வேண்டும்.

ஆனால் பழனிசாமி அந்த உண்மையைச் சொல்லவில்லை. ‘கனகராஜுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. கொடநாடு வீட்டுக்குள் அவரை நான் அனுப்பவில்லை. கனகராஜ் எந்தப் பையையும் கொண்டு வந்து என்னிடம் தரவில்லை. இதை எந்த இடத்திலும் சொல்ல நான் தயாராக இருக்கிறேன்’ என்றல்லவா பழனிசாமி சொல்லி இருக்க வேண்டும். அதைச் சொல்லவில்லை பழனிசாமி. ‘கனகராஜ், ஜெயலலிதாவின் கார் டிரைவர் அல்ல, சசிகலாவின் டிரைவர்தான்’ என்று விளக்கம் அளித்துள்ளார். கனகராஜ், யார் காரை ஓட்டினார் என்பதல்ல பிரச்சினை.

**“கனகராஜை, ஜெயலலிதாவின் கார் டிரைவர் என இனி யாரும் சொல்லக் கூடாது. அவர் சசிகலாவுக்கு கார் டிரைவராக இருந்தவர். கனகராஜை, ஜெயலலிதாவின் கார் டிரைவர் என்று இனி யாராவது சொன்னால் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வோம். கொடநாடு பற்றி யாரும் பேசக் கூடாது. அந்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது”** இதுதான் கடந்த 25 ஆம் தேதி சேலத்தில் வைத்து பழனிசாமி கொடுத்த பேட்டி ஆகும். கனகராஜ், யாருக்கு கார் டிரைவராக இருந்தார் என்பதல்ல பிரச்சினை. கனகராஜை ஏவியது யார் என்பதுதான் கேள்வி.

* கொடநாடு பங்களாவில் கொலை, கொள்ளை நடந்தது 2017 ஏப்ரல் 23 ஆம் தேதி. அப்போது முதலமைச்சராக இருந்தவர் பழனிசாமி. அன்றைய தினமே ஓம்பகதூர் என்ற காவலாளி கொலை செய்யப்பட்டார்.

* அடுத்த ஐந்தாவது நாள் அதாவது ஏப்ரல் 28 ஆம் தேதி ஆத்தூர் அருகே உள்ள முல்லைவாடி சந்தனகிரி புறவழிச்சாலை தென்னங்குடி பாளையம் என்ற இடத்தில் மர்மமான முறையில் கனகராஜ் இறந்து கிடந்தார். இருசக்கர வாகனத்தில் சென்ற கனகராஜ் மீது கார் மோதியதாக அ.தி.மு.க. ஆட்சியில் வழக்கு பதியப்பட்டது. ‘இது விபத்து அல்ல, என் சகோதரர் மரணத்தில் மர்மம் உள்ளது’ என்று கனகராஜின் சகோதரர் தனபால் அன்று முதல் சொல்லி வருகிறார்.

* கனகராஜ் சொல்லி இந்தச் சம்பவத்தைச் செய்த சயான் மீது இதே போல் மர்மமான கார் மோதுகிறது. அதில் சம்பவ இடத்திலேயே சயானின் மனைவியும், மகளும் மரணம் அடைகிறார்கள்.

* கொடநாடு எஸ்டேட்டின் சி.சி.டி.வியை கையாளும் தினேஷ்குமார் என்பவர் மர்மமான முறையில் தற்கொலை செய்து கொள்கிறார்.

- இந்த வகையில் ஒரு கொள்ளை - ஒரு கொலை - மூன்று மர்ம மரணங்கள் – ஒரு தற்கொலை ஆகியவை நடந்த மர்மமான வழக்கு இது. பழனிசாமி ஆட்சி செய்தபோது தான் இது நடந்தது. அ.தி.மு.க. ஆட்சியில் சிலரை கைது செய்து கணக்குக் காட்டி முடிக்கப் பார்த்தார்கள். தி.மு.க. ஆட்சி மாறியதும், வழக்கின் விசாரணை உண்மையாக நடக்கத் தொடங்கியது.

**குற்றம் சாட்டப்பட்டு கைதானவர்களே, ‘நாங்கள் இன்னும் சில உண்மைகளைச் சொல்ல வேண்டும்’ என்று முன் வந்ததால் அந்த வழக்கு மீண்டும் நீதிமன்ற அனுமதியுடன் விசாரிக்கப்பட்டது. இந்த விசாரணையைத் தொடங்கியதும், பதற்றம் ஆனார் பழனிசாமி. 2021 ஆகஸ்ட் 18 ஆம் நாள் சட்டமன்றத்தில் கொந்தளித்தார். வெளிநடப்பு செய்தார். உடனடியாக ஆளுநரிடம் போய் மனு கொடுத்தார். ‘என்னைக் கைது செய்ய சதி’ என்று அலறினார். “கொடநாடு வழக்கை மீண்டும் விசாரிக்கக் கூடாது. சயன் வழக்கு முடியும் தருவாயில் உள்ளது. இதை மீண்டும் விசாரித்து வருகிறார்கள். இவர்கள் கேரளாவைச் சேர்ந்தவர்கள். சயன் வாக்குமூலத்தில் என்னையும் இணைத்துள்ளார்கள். மீண்டும் வழக்கை விசாரிக்கிறார்கள். பழிவாங்க இதை ஜோடிக்கிறார்கள்” என்று ஏதேதோ சொன்னார் பழனிசாமி.**

ஒரு வழக்கை மீண்டும் விசாரிக்கக் கூடாது என்று சொல்ல இவர் யார்?

எந்த வழக்கையும் மேற்கொண்டு புலன் விசாரணையை காவல் துறை நடத்தலாம். மேல் புலன் விசாரணை (Further Investigation) என்பது குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டத்தின் 173(8) பிரிவின் படி நடத்தப்படுவது. அதன்படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்த பின்னர் கூடுதல் தகவல் கிடைத்தால் அதை முறைப்படி விசாரணை செய்ய காவல் துறைக்கு உரிமையும் கடமையும் உண்டு. அதன்படி தான் கொடநாடு வழக்கிலும் மேற்கொண்டு புலன் விசாரணை நடத்தப்படுகிறது.

**சட்டப்படி தான் நடக்கிறது விசாரணை. அனைத்தும் சட்டப்படி விரைவில் நடக்கும்.**

●●



திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராகப் பொறுப்பேற்று ஆறாம் ஆண்டு தொடங்கியதையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.08.2023 பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் கழகப் பொதுச்செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.



திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராகப் பொறுப்பேற்று ஆறாம் ஆண்டு தொடங்கியதையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.08.2023) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.



திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராகப் பொறுப்பேற்று ஆறாம் ஆண்டு தொடங்கியதையொட்டி கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (28.08.2023) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், கழக பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

## சென்னை உயர்நீதி மன்றத் தீர்ப்புகளை

# தமிழில் மொழிபெயர்த்து வெளியிட - ரூ.3 கோடி ஒதுக்கீடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஆக.30–**

**சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்புகளை தமிழில் மொழி பெயர்த்து வெளியிட மூன்று கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இதுதொடர்பான முதல்வர் அவர்களின் அறிக்கை வருமாறு :-

1968ஆம் ஆண்டு ஜனவரி மாதம், பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராக இருந்தபோதுதான் வரலாற்றுச் சிறப்புமிக்க ‘இருமொழிக் கொள்கை’ தீர்மானம் தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது. அன்றில் இருந்து இன்று வரை தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கையே பின்பற்றப்பட்டு வருவதோடு, பல துறைகளிலும் தமிழின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையிலும், காலத்துக்கேற்ப தமிழை வளர்த்தெடுக்கவும் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழைச் சட்ட ஆட்சி மொழியாகக் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கத்தில், அதற்காகத் தயாராகும் வகையில், மாநிலச் சட்ட ஆட்சி மொழி ஆணையம் மற்றும் சட்டத்துறையின் தமிழ்ப்பிரிவு மூலமாகத் தமிழில் சட்டச் சொற்களஞ்சியம் தயாரித்து அச்சிடுவது, மாநில மற்றும் ஒன்றியச் சட்டங்கள், அவசரச் சட்டங்கள் மற்றும் அவற்றின்கீழ் வகுக்கப்பட்ட விதிகள் மற்றும் அறிவிக்கைகளையும் தமிழில் மொழிபெயர்த்தல் ஆகிய பணிகளைத் தமிழ்நாடு அரசின் சட்டத்துறை செய்து வருகிறது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ் வழக்காடு மொழியாக வேண்டும் என்று ஓங்கிக் குரல் கொடுத்து அதற்கான முயற்சிகளை எடுத்து வந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவரது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிவரும் இந்தத் தருணத்தில் தமிழைச் சட்ட ஆட்சி மொழியாக்கும் அவரது கனவை நனவாக்கவும், அனைத்து மக்களுக்கும் சென்னை உயர்நீதி மன்றத் தீர்ப்புகள் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தோடும் மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையத்தின் மூலமாகச் சென்னை உயர் நீதி மன்றத் தீர்ப்புகளைத் தமிழில் மொழிபெயர்த்து அவற்றைப் பொது மக்கள் மற்றும் வழக்கறிஞர்களது பயன்பாட்டிற்காகக் கொண்டுசெல்ல வேண்டும் என்று கலைஞர் அவர்களின் வழிநடக்கும் நமது அரசு முடிவு செய்துள்ளது.

இப்பணிக்காக மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையத்திற்கு முதற்கட்டமாக மூன்று கோடி ரூபாயும், பின்னர் தேவைக்கேற்பவும் நிதி ஒதுக்கீடு செய்யவும் உத்தரவிட்டுள்ளேன். “தொண்டு செய்வாய் தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்தே” என்று பாவேந்தர் காட்டிய வழியில் செம்மொழித் தமிழுக்குச் சட்டத்துறையிலும் உரிய இடத்தைப் பெற்றுத் தருவோம்!

இவ்வாறு அவ்வறிக்கையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப் பிட்டுள்ளார்.



பட்டுக்கோட்டை கொண்டிக்குளத்தில், தி.மு.கழக மாநில வர்த்தகர் அணி துணைத் தலைவர் பழஞ்சூர் செல்வத்தின் மகள் மருத்துவர் அனுஷ்யா – மருத்துவர் எஸ்.விக்னேஸ்வரன் இணையரின் திருமணத்தை கழக இளைஞரணி செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று நடத்தி வைத்தார். மணவிழாவில் அமைச்சர் பெருமக்கள், கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

திராவிட மாடல் ஆட்சியில் – பள்ளிக் குழந்தைகளின் பசிதீர்த்து

# கல்விக் கண்ணொளியைப் பரப்புகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஆக.30-



படிக்காதே என்றது சனாதனம், பசியைப் போக்கி மாணவர்களைப் 'படி படி' என்பது திராவிட மாடல் அரசு! என முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைப் பாராட்டி திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

திராவிடர் இயக்கம் தோன்றுவதற்கு சில ஆண்டுகளுக்குமுன் 1912 ஆம் ஆண்டு முதலே, டாக்டர் சி.நடேசனார், அவரைப் போன்ற சில வழக்குரைஞர்களான பெருமக்கள் கூடி, சென்னை கல்லூரிகளில் படிக்கும் பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கு மற்ற விடுதிகளில் தங்கி, படித்திட வாய்ப்பு மறுக்கப்பட்டதாலும், வசதியற்ற நிலையாலும் அவர்களே 'திராவிடன் விடுதி'யைத் திருவல்லிக்கேணியில் நடத்தி, பலருக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்குக் கல்விக் கண் திறந்தனர்.

**சூத்திரனுக்குக் கல்வி கிடையாது என்றது மனுதர்மம்!**

சூத்திரனுக்கு, பஞ்சமனுக்கு, கீழ்ஜாதிக்காரனுக்குப் படிப்பு கல்வியைத் தரக்கூடாது என்கிற மனுதர்மத்தை நடைமுறைப் படுத்திய வரலாறு அரசர்கள் காலத்தில்கூட மனுநீதிப்படி பார்ப்பன பிள்ளைகளுக்கேபடிக்கவசதி மற்றவர்களுக்கு அல்ல.

மதுரை நாயக்கர் ஆட்சியில், இத்தாலியப் பாதிரியார் ராபர்ட் டி நொபிலி என்பவர் வந்து, பார்த்தறிந்த முதல் தகவலில் 10 ஆயிரம் பிள்ளைகள் பார்ப்பனர்கள் சமஸ்கிருதக் கல்வியைத் தான் படித்தார்கள் என்று குறிப்பிட்டார். (1610ஆம் ஆண்டு)

அதை மாற்றி ஒடுக்கப்பட்டோருக்கு கல்வி, சுகாதாரம், பகுத்தறிவு, பெண்ணுரிமை தருவதற்குப் பிறந்ததே ஜஸ்டிஸ் கட்சி என்று அழைக்கப்பட்ட நீதிக்கட்சி ஆகிய திராவிடர் கட்சியும், சுயமரியாதை இயக்கமும்!

**நீதிக்கட்சியின் உணவுத் திட்டம்!**

சர் பிட்டி தியாகராயர் அவர்கள் சென்னை மாகாணத்தின் தலைவராக (மேயர் என்பது அப்போது இல்லை) சென்னை கார்ப்பரேசன் பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியருக்கு ஒருவேளை உணவு தரும் திட்டத்தினை தொடங்கினார். சில காலம் தான் நடத்த, பிரிட்டிஷார் அரசு அனுமதித்தது. பிறகு நிதி வழங்க மறுத்ததால், அத்திட்டம் நிறுத்தப்பட வேண்டியதாயிற்று; அரசுக்கு முழு அதிகாரம் அப்போது இல்லை!

அதன் பிறகு கல்வி வள்ளல் காமராசர் பள்ளிகளில் பகல் உணவுத் திட்டத்தைத் தொடங்கி, சிறப்பாக நடத்தி, ஏழைப் பிள்ளைகள் படிப்பைத் தொடரச் செய்தார்!

ஏழைப் பிள்ளைகள், கிராமங்களில் உள்ளவர்கள், ஒடுக்கப்பட்டோர் சமூகப் பிள்ளைகள் இதனால் மேலும் படித்து முன்னேற படிக்கட்டாகி 'கிரியா ஊக்கி'யாக இந்த பகல் உணவுத் திட்டம் உதவியது!

அன்று கல்வித் துறை இயக்குநராக இருந்த நெ.து.சுந்தரவடிவேலு போன்ற நேர்மையும், ஆளுமையும் நிறைந்த பல அரசு அதிகாரிகள் இத்திட்ட வெற்றிக்குக் கடுமையாக உழைத்தனர்.

**கலைஞர் காலத்தில் மேலும் மேம்பட்டது!**

எம்.ஜி.ஆர். ஆட்சியில் அ.தி.மு.க. ஆட்சியில் அது மதிய உணவு சத்துணவுத் திட்டம் என்ற பெயரில் தொடர்ந்தது.

கலைஞர் அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தபோது, அதை உண்மையான சத்துணவாக்கிட இரு முட்டைகள் அல்லது வாழைப் பழங்கள் அளித்து மேலும் குழந்தைகள் பசி தீர்ப்பதோடு, ஊட்டச் சத்துப் பெருக்கத்திற்கும் உதவி, பிள்ளைகள் நலம் பெறுவதற்கும் உதவும் திட்டத்தை மேலும் மெருகேற்றினார்.

'திராவிட மாடல்' ஆட்சி இன்று நமது ஒப்பற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றுவரும் இரண்டு ஆண்டுகளைத் தாண்டும் ஆட்சியில், பகல் உணவோடு கூடவே காலைச் சிற்றுண்டி யும் முதல் கட்டமாக சில அரசு பள்ளிகளில் வழங்கியதை கலைஞர் நூற்றாண்டையொட்டி (25.8.2023) நாடு முழுவதிலும் உள்ள அரசு பள்ளி மாணவர்களுக்கு வழங்கும் அரிய பசி தீர்த்து படிப்பு தரும் புதுமையான திட்டத்தை கலைஞர் படித்த சிற்றூரான திருக்குவளையில் தொடங்கி வைத்துள்ளார்.

தி.மு.க. ஆட்சி, சமூகநீதிக்கான சரித்திர நாயகர் மு.க.ஸ்டாலின் ஆட்சியின் மகுடத்தில் ஜொலிக்கும் மற்றுமோர் வைரக்கல்.

**"புசியுங்கள் படியுங்கள்!"**

"படிங்க, படிங்க, படிங்க" என்று முன்பு சொன்ன போது, கிராமத்து ஏழை மாணவர்கள் மாடு மேய்த்த நிலையில், "பசிங்க, பசிங்க" என்று இருந்த நிலையில், காமராஜர் அவர்கள், மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்து "புசிங்க, புசிங்க" என்று செய்த ஏற்பாடு இன்றைக்கு. அத்திட்டம் மேலும் விரிவடைந்து, சத்துணவாக்கி, அடுத்து முக்கியமாக காலைச் சிற்றுண்டி மூலம் பசியோடு படிக்காமல், அவர்தம் பசியாற்றி விட்டு, கற்க வரும் பிள்ளைகளை வகுப்பறையில் அமர வைத்துப் பாடம் சொல்லிக் கொடுப்பது என்பது ஒரு மாபெரும் கல்விப் புரட்சியாகும்!

பல மாணவர்கள் காலைச் சிற்றுண்டி இல்லாமல் வகுப்பறைக்கு வந்து, கவனக்குறைவுடனும், பசி காரணமாகவும் மயக்கமுற்றும், 'இளமை யிற் கல்' என்பதற்கு வாய்ப்புக்கேடு ஏற்படுவதாகவும் இருந்தது. இதன்மூலம் இந்தியாவிற்கே 'திராவிட மாடல்' ஆட்சி பெரியார் மண்ணில் நடைபெறும் திராவிட நாயகரின் ஆட்சி சாதனை இந்தியாவின் இதர மாநிலங்களுக்கே வழிகாட்டிடும் கலங்கரை வெளிச்சமாகும் கல்வித் திட்டமாகும்.

**நன்கொடை பெற்று ஓர் அறக்கட்டளையாகக்கூட ஆக்கலாம்**

நிதிப் பற்றாக்குறை ஆட்சியின் குரல்வளையை நெருக்கிடும் நிலையில், இதற்கு முன்னுரிமை கொடுத்து, இத்திட்டத்தால் 17 லட்சம் அரசு பள்ளி மாணவச் செல்வங்கள் புத்துணர்ச்சி பெற்று கல்விக் கூடத்தை அலங்கரிக்கிறார்கள். இத்திட்டத்தினைக் கொண்டு வந்த முதலமைச்சர் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இதற்கென ஒரு தனி நிதியத்தை முதலமைச்சர் அவர்கள் உருவாக்கி, அறக்கட்டளையாக்கி, மக்களில் வசதி படைத்தவர்கள் நன்கொடைகளை அளித்து எல்லாப் பள்ளிகளிலும், தனியார் நடத்தும் பள்ளிகளிலும் கூட அவர்கள் பொறுப்பில் காலைச் சிற்றுண்டியைப் பிள்ளைகளுக்கு வழங்கலாம். உணவுத் தரத்தில் சமரசம் கூடாது; தூய்மை உள்பட!

**இதுதான் 'திராவிட மாடல்' ஆட்சி**

அதிக தூக்கம் பிள்ளைகளுக்கு வராத உணவாகவும், நிபுணர்களால் திட்டமிட்டு வழங்கி முழுப் பயன் கிட்ட மேலும் மெருகேற்ற வேண்டும்.

வாழ்க முதலமைச்சர் வளர்க 'திராவிட மாடல்' ஆட்சி!

"சனாதனம்" கல்விக் கண்களைக் குத்தி குலக்கல்வியைத் திணிக்கிறது.

"திராவிடம்" பசி தீர்த்து பசுமையான கல்விக் கண்ணொளியைப் பரப்புகிறது.

இதுதான் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு! புரிந்து கொள்வீர்!!

இவ்வாறு அவ்வறிக்கையில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** அண்ணே! 'சிவசக்தி முனையத்தை தலைநகரமாகக் கொண்டு, இந்து நாட்டை நிலவில் இந்தியா உருவாக்க வேண்டும்' என்ற கோரிக்கை எழுந்திருக்கிறதே?

**பெரியதம்பி : ஆமாம்பா! அது மட்டுமா ? நிலவை 'இந்து சனாதன நாடு' என்று அறிவிக்க வேண்டும் என்ற இரண்டாவது கோரிக்கையும், பிரதமருக்கு வைக்கப்பட்டுள்ளது.**

**இந்த கோரிக்கைகளை முன்வைத்திருப்பவர் அகில இந்திய இந்து மகா சபையின் தேசியத் தலைவர் சுவாமி சக்ரபாணி மகராஜ் என்பவர் ஆகும்.**

**இனி இப்படி ஆர்.எஸ்.எஸ். மற்றும் மதவாத — மதவெறிப் பிரிவினை அமைப்புகள், நிலவு குறித்து, வரிசையாகக் கோரிக்கை வைக்க ஆரம்பித்து விடுவார்கள். 'கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால், நிலவுக்கே சென்று போராட்டம் நடத்துவோம்' என்று அச்சுறுத்த ஆரம்பித்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை !**

**வெளிநாட்டிலிருந்து, விளம்பர நோக்கத்துடன், சந்திரயான் வெற்றியைக் கொண்டாடுவதற்கு, அவசர அவசரமாக இந்தியா வந்த பிரதமர் மோடி அவர்கள் பெங்களூருவில் கொண்டாட்டத்தோடும், விஞ்ஞானிகளைப் பாராட்டியதோடும் முடித்துக் கொண்டு டில்லி திரும்பியிருந்தால், இந்த மாதிரி சர்ச்சைக்குரிய வேண்டுகோள்கள் எல்லாம் எழுந்திருக்காது.**

**ஆனால் நிலவு தொடர்பான தரவுகள் முழுமையாகச் சேகரிக்கப்பட்டு, அவற்றை வகைப் படுத்தி ஆய்வு செய்து, அதன் மூலம் மனித சமூகத்திற்கு எப்படிப்பட்ட நன்மைகளை வழங்கி மேம்பாடு காணலாம் என்பதை முடிவு செய்வதற்கு முன்பே, லேண்டர் விண்கலம் வெற்றிகரமாகத் தரை இறங்கிய இடத்துக்குப் பிரதமர் மோடி அவர்கள், 'சிவசக்தி முனையம்' என்று இந்துத்வா சார்ந்த பெயர் வைத்ததனால்தான், இந்தக் கோரிக்கைகள் !**

**குழந்தை பிறப்பதற்குமுன், அது ஆணா பெண்ணா என்று தெரியாமல் பெயர் சூட்டுவதைப் போன்றது இது !**

---

தமிழறிஞர் பெருமக்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன!

# திருவள்ளுவர் விருது உள்ளிட்ட 75 விருதுகளுக்கான விண்ணப்பங்கள்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஆக.30 - 2024 ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருதுக்கும், 2023 ஆம் ஆண்டுக்கான 74 விருதுகளுக்கும் தகைமையும் தொண்டறமும் பூண்ட தமிழறிஞர் பெருமக்களிடமிருந்து தமிழ்நாடு அரசு விண்ணப்பங்களை கோருகின்றன.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

பன்னூறு ஆண்டுகளாக வற்றாத படைப்புக்களைக் கொண்டு, சீரிளமையோடு இயங்கி வரும் தமிழுக்கும், தமிழ்மொழி, பண்பாட்டு வளர்ச்சிக்குத் தொண்டாற்றிடும் தமிழ்த்தாயின் திருத்தொண்டர்களுக்குத் தமிழால் விளங்கிடும் தமிழ்நாடு அரசு பல்வேறு விருதுகளையும் சிறப்புகளையும் அளித்து, அவர்தம் தொண்டுக்கும் தமிழுக்கும் பெருமை சேர்த்து வருகின்றது நீங்கள் அறிந்த ஒன்றே.

அவ்வகையில் எதிர்வரும் 2024ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருதுக்கும், 2023ஆம் ஆண்டுக்கான 74 விருதுகளுக்கும் தகைமையும் தொண்டறமும் பூண்ட தமிழறிஞர் பெருமக்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன.

விருதுகளின் அணிவரிசை:

1. திருவள்ளுவர் விருது, 2. மகாகவி பாரதியார் விருது, 3. பாவேந்தர் பாரதிதாசன் விருது, 4. தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது 5. கி. ஆ. பெ. விசுவநாதம் விருது, 6. பெருந்தலைவர் காமராசர் விருது 7. பேரறிஞர் அண்ணா விருது தலா ஒரு நபருக்கு ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை, 8. இலக்கிய மாமணி விருது 3 நபருக்கு ரூ.5.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை.

ஆ.தமிழ்வளர்ச்சித் துறை விருதுகள்

1. தமிழ்த்தாய் விருது, 1 நபருக்கு ரூ. 5.00 இலட்சம், கேடயம், தகுதியுரை, 2. கபிலர் விருது, 3. உ.வே.சா. விருது, 4. கம்பன் விருது, 5. சொல்லின் செல்வர் விருது, 6. உமறுப் புலவர் விருது, 7. ஜி.யு. போப் விருது, 8. இளங்கோவடிகள் விருது, 9. அம்மா இலக்கிய விருது தலா ஒரு நபருக்கு ரூ.2.00 இலட்சம், தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை, 10. மொழி பெயர்ப்பாளர் விருது 10. நபர்களுக்கு, 11. 'சிந்தனைச்சிற்பி' சிங்காரவேலர் விருது, 12. அயோத்திதாசர் விருது, 13. மறைமலையடிகளார் விருது, 14. அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது, 15. காரைக்கால் அம்மையார் விருது, ஆகிய பெயர்களில் தலா நபருக்கும், 16.தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் விருது, 3 நபர்களுக்கும், ரூ.2 லட்சம், கேடயம், தகுதியுரை பொன்னாடையும், 17. தமிழ்ச் செம்மல் விருது 38 மாவட்டந்தோறும் ஒருவருக்கு தலா ரூ. 25,000/ மற்றும் தகுதியுரை என மொத்தம் 75 விருதுகள் வழங்கப்படுகின்றன.

தகைசான்ற அறிஞர் பெருமக்கள் http://awards.tn.gov.in என்ற இணைய தளத்தின் வழியாகவோ அல்லது தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், தமிழ்ச்சாலை, எழும்பூர், சென்னை 600 008 என்ற முகவரிக்கு அஞ்சல் வாயிலாகவோ 15.10.2023 ஆம் நாளுக்குள் விண்ணப்பங்களை அனுப்பிட வேண்டுகின்றோம். தக்க ஆவணங்களோடு விண்ணப்பங்கள் அமைதல் விரும்பத்தக்கது. மேற்கண்ட இணையதளத்திலேயே போதுமான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

கூடுதல் விவரமறிய விரும்புவோர் 044 28190412, 044 - 28190413 ஆகிய தொலைபேசி எண்களை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம். உரிய நாளுக்குள் (15.10.2023) பெறப்படும் விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்படும் என்பதை அறிஞர் பெருமக்கள் நினைவிற் கொள்ள அன்புடன் வேண்டுகின்றோம்.

இவ்வாறு தமிழ்நாடு அரசு ெளியிட்டுள்ளசெய்திக் குறிப்பில் குறிப்பிடப் பட்டுள்ளது.

---

மீஞ்சூரில் அமைந்துள்ள

# கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்தில் பராமரிப்புப் பணி!

## சென்னை குடிநீர் வாரியம் அறிவிப்பு!

சென்னை, ஆக.30- மீஞ்சூரில் அமைந்துள்ள நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் நிலையத்தில் இன்று (30.8.2023) காலை 10 மணி முதல் நாளை (31.08.2023) காலை 10 மணி வரை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. எனவே, மாற்று ஏற்பாடாக, மாதவரம், மணலி, திருவொற்றியூர், எர்ணாவூர், கத்திவாக்கம், பட்டேல் நகர், வியாசர்பாடி ஆகிய பகுதிகளுக்கு புழல் குடிநீர் சுத்தி கரிப்பு நிலையத்திலிருந்து குடிநீர் வழங்கப்படும்.

எனவே, பொதுமக்கள், முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in/ என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெருநடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப் படும் என்று சென்னை பெருநகர குடிநீர் வாரியம் அறிவித்துள்ளது.

---

கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி எழுதிய

# 'கலைஞர் 100' - பாடல்கள் வெளியீடு!

## டி.கே.எஸ்.இளங்கோவன் - கோவி. செழியன் - காசி முத்து மாணிக்கம் - மேயர் பிரியா பங்கேற்பு!

சென்னை, ஆக.30- சென்னை - இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபுவின் வாழ்த்துகளுடன் தாய்மடி தமிழ் அமைப்பு - தமிழ் நிறம் யூட்யூப் சேனல் வழங்கும் - கலைஞர் நூற்றாண்டு கொண்டாட்டம் - கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷிணி எழுதிய "கலைஞர் 100" பாடல்கள் வெளியீடு இன்று (30.8.2023 - புதன்கிழமை) காலை 10.30 மணிக்கு சைதை அன்னை வேளாங்கண்ணி மகளிர் கல்லூரியில் நடைபெறுகின்றது.

கழக செய்தித் தொடர்பு துணைத் தலைவர் கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி அறிமுக உரை நிகழ்த்துகிறார்.

கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் தலைமை உரை நிகழ்த்துகிறார்.

பாடல்களை மேயர் பிரியாராஜன் வெளியிடுகிறார்.

'தமிழ்நாட்டின் தலைமகன் வாழ்க' பாடல் பெறுபவர் அரசு கொறடா முனைவர் கோவி.செழியன், 'கலைஞரய்யா வந்தாரு' பாடல் பெறுபவர் கவிஞர் காசி முத்து மாணிக்கம்,

நிகழ்ச்சிக்கு அன்னை வேளாங்கண்ணி கல்விக் குழுமத் தலைவர் டாக்டர் எஸ்.தேவராஜ், துணைத் தலைவர் டாக்டர் எம். டெல்ஃபின் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அன்னை வேளாங்கண்ணி கல்விக் குழும செயலாளர் டாக்டர் டி.தேவ் ஆனந்த், கல்லூரி முதல்வர் முனைவர் த.விமலா ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர். திரை இசையமைப்பாளர் மெர்லின் சார்லஸ், பாடகர் வேல்முருகன், புகைப்பட கலைஞர் பாலமுரளி ஆகியோர் ஏற்புரை வழங்குகின்றனர்.

முனைவர் தமிழரசி சிவகுமார் நன்றி கூறுகிறார்.

ஊடகவியாளர் மெ.சிவநந்தினி நிகழ்ச்சி நெறியாளராக திகழ்கிறார்.

---



இராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் (26.08.2023) அன்று பொதுசுகாதாரத்துறையின் மூலம் 500 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவ சேவை மையங்கள் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.விஷ்ணு சந்திரன் தலைமை வகித்தார். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராம தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், மாவட்டக் கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ, ஆகியோர் 500 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவ சேவைகளை திறந்து வைத்து சிகிச்சை பிரிவு மையங்களை பார்வையிட்டார்கள்.



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு அகில இந்திய அளவிலான மகளிர் கபடிப் போட்டியில் முதலிடம் பிடித்த அந்தியூர் அணிக்கு கோப்பையினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் வழங்கினார். உடன் மாவட்ட துணை செயலாளர் த.சேங்கைமாறன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனிசெந்தில்குமார், தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் காளிமுத்து உட்பட நிர்வாகிகள் உள்ளார்கள்.



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் க.வீரையா அவர்களின் சகோதரர் ஒன்றுபட்ட புதுக்கோட்டை மாவட்ட தி.மு.க. செயலாளர் அமரர் க.சிதம்பரம் அவர்களின் துணைவியாரும், தொழிலதிபர் சி.ஆசைத்தம்பியின் தாயாரும், புதுக்கோட்டை தெற்கு ஒன்றியச் செயலாளர் மு.க.ராமகிருஷ்ணனின் அத்தையுமான சி.ராஜேஸ்வரி அம்மையார் சமீபத்தில் மறைவெய்தினார். கழக இளைஞரணிச் செயலாளரும், விளையாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் புதுக்கோட்டை அம்பாள்புரம் வீட்டில் உள்ள அவரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்தார். இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மு.கலியமூர்த்தி, டாக்டர் மு.க.முத்துக்கருப்பன் ஆகியோர் உள்ளனர்.




திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், மாவட்ட கழக அலுவலகத்தில், சேலத்தில் டிசம்பர் 17ஆம் தேதி நடைபெற உள்ள இளைஞரணி மாநாட்டிற்கான கவுண்ட் டவுனை தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சரும், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார். இந்த நிகழ்வில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சரும், திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர், மாவட்ட கழகச் செயலாளர்கள் தியாகராஜன், வைரமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் கதிரவன், மாநகராட்சி மேயர் அன்பழகன், மாநகரச் செயலாளரும், மாநகராட்சி மண்டல குழு தலைவருமான மு.மதிவாணன், துணை மேயர் திவ்யா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.என்.சேகரன், வண்ணை அரங்கநாதன், சபியுல்லா, மாநில இளைஞரணி துணை செயலாளர் ஆனந்த் குமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வெங்கடேஷ்குமார், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் முத்து தீபக், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பாலமுருகன், பெர்னார்டு சாமிநாதன், ரவீந்திரன், தேசிங்குராஜா, விஷ்ணுவர்தன், மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பார்த்தசாரதி, அல்லாபிச்சை, கண்ணன் மற்றும் இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலையுடன்

# தமிழ்நாடு அரசின் ஊக்கத் தொகையினையும் சேர்த்து வழங்க ஆணை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக. 30-

தமிழ்நாட்டு விவசாயிகளின் நலன் கருதி நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலையுடன் தமிழ்நாடு அரசின் ஊக்கத்தொகையினையும் சேர்த்து வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

ஒன்றிய அரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் காரிப் பருவம் 2002-2003 முதல் ஒன்றிய அரசின் முகவராக தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் செயல்பட்டு ஒன்றிய அரசின் தர நிர்ணயத்திற்குட்பட்டு நெல் கொள்முதல் செய்து வருகிறது.

கடந்த 2022-2023 காரீப் கொள்முதல் பருவத்தில் 21.08.2023 வரையில் 3526 எண்ணிக்கையிலான நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 5,20,503 விவசாயிகளிட மிருந்து 43,84,226 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு ரூ.9,414.58 கோடி விற்பனை தொகையாக வழங்கப்பட்டது. இந்த ஆண்டும் காரீப் கொள்முதல் 2023-2024 பருவத்தில் தேவையான அளவு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்து ஒன்றிய அரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் விவசாயி களிடமிருந்து நெல் கொள்முதல் செய்ய மாநில அரசு முடிவெடுத் துள்ளது.

இந்த ஆண்டு 12.06.2023 அன்று மேட்டூர் அணை திறக்கப்பட்டுள்ள நிலையில், விவசாயிகளுக்குத் தேவையான அளவு விதைகள் மற்றும் உரங்கள் குறுவை தொகுப்பு திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள நிலையில், விவசாயிகளின் நலன் கருதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காரீப் 2023-2024 பருவத்திற்கான நெல் கொள்முதலினை 01.09.2023 முதற்கொண்டு மேற்கொள்ள ஒன்றிய அரசை கேட்டுக் கொண்டதற்கிணங்க ஒன்றிய அரசு தமிழ்நாட்டில் காரீப் 2023-2024 பருவத்திற்கான நெல் கொள்முதலினை 01.09.2023 முதற்கொண்டு மேற்கொள்ள ஒப்புதல் அளித்துள்ளது.

ஒன்றிய அரசு காரீப் 2023-2024 பருவத்திற்கு குறைந்தபட்ச ஆதாரவிலையாக சாதாரண ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,183/-என்றும், சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,203/- என்றும் நிர்ணயித்துள் ளது.

இந்நிலையில் நெல் உற்பத்தியினைப் பெருக்கும் வகையிலும், விவசாயிகளின் துயர்துடைத்து அவர்களை மேலும் ஊக்கப்படுத்தும் நோக்கோடும், கே.எம்.எஸ். 2023-2024 கொள்முதல் பருவத்திற்கு சாதா ரண நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.82/-ம், சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.107/-ம் கூடுதல் ஊக்கத் தொகையாக தமிழக அரசின் நிதி யிலிருந்து வழங்க ஆணை பிறப்பித்து அதன்படியே, தற்போது சாதாரண நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,265/- என்றும், சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,310/- என்றும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் விற்கும் விவசாயிகளுக்கு வழங்க தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், இந்த புதிய குறைந்தபட்ச ஆதார விலை மற்றும் மாநில அரசின் ஊக்கத் தொகையினை 01.09.2023 முதல் வழங்கவும் முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

### என்.கௌதமன் தலைமை!

# நாகை மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை! அன்பில் மகேஷ்பொய்யாமொழி, எஸ்.இரகுபதி, என்.இளையராஜா பங்கேற்பு!

நாகை, ஆக.30-

நாகை மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் நாகையில் புதிய பேருந்து நிலையம் அருகே அவுரித்திடலில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் தலைமை தாங்கினார். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.என். கார்த்தி வரவேற்றார். மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் என். இளையராஜா, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தி.கலையரசன், டி.அசோக், கோ. தாமோதரன், ஜெ.ஆர். கே.சுரேஷ், எஸ்.டேனியல்சத்தியா, பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர் - இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில்மகேஷ்பொய்யாமொழி, சட்டத்துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், கழக தீர்மானக்குழு உறுப்பினர் என்.வி.காமராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இல.மேகநாதன், க.ராஜேந்திரன், ப.கோவிந்தராசன், மாவட்டக் கழக அவைத் தலைவர் ப.செல்வம், துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர் மணிவண்ணன், கற்பகம், பொருளாளர் மு.லோகநாதன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன், மகா.குமார், ஆர்.டி.எஸ். சரவணன், செல்வ.செங்குட்டுவன், சிக்கல் என். ஆனந்த், கே.பழனியப்பன், சோ.பா.மலர்வண்ணன், உதயம் வே.முருகையன், என்.சதாசிவம், நகரக் கழகச் செயலாளர்கள் நாகை இரா.மாரிமுத்து, வேதாரண்யம் மா.மீ.புகழேந்தி, நாகூர் எம்.ஆர்.செந்தில்குமார், நகரக் கழகச் செயலாளர்கள் கீழ்வேளூர் கா. அட்சயலிங்கம், வேளாங்கண்ணி மரியசார்லஸ், தலைஞாயிறு சுப்பிரமணியன், திட்டச்சேரி முகமது சுல்தான், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் இரா.முருகையன், கேஸ் வி.செந்தில், பி.முருகானந்தம், ஆர்.சுரேந்தர், மு. தினேஷ், என்.கே.ஜி.ஏ. சேகர், அ.பாரிபாலன், க. சத்தியமூர்த்தி, பி.கமல், எஸ்.வெற்றிவேல், ஆர்.ஏ. டி.அண்ணாதுரை, எஸ். வி.டி.அருள், இளம்.சுந்தர், த.தமயந்தி, ஆர்.துரைராஜ், கே.எஸ்.சாகுல்ஹமீது ராஜா, ஆர்.ஆர்.குலோத்துங்கன், எஸ்.புவனேஸ்வரி மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி நிர்வாகிகள், இளைஞர் அணியினர் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழகத்தினர் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

# விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரை!

செஞ்சி, ஆக. 30 -

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அவசர செயற்குழு ஆலோசனைக் கூட்டம்செஞ்சியில் நடைபெற்றது.

மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர் தலைமை தாங்கினார்.மாவட்ட துணை செயலாளர்கள் ரவிக்குமார், அருணகிரி, அமுதா ரவிக்குமார், பொருளாளர் ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவரும் செயற்குழு உறுப்பினருமான விஜய குமார் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளரும்,சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சருமான செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றி னார்.

நிகழ்ச்சியில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேசுகையில்: முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் உலகமே திரும்பிப் பார்க்கும் வகையில் தமிழகத்தில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்த வருகின்றார். ஒரு தாய்க்கு தாயாக தொலை நோக்கு சிந்தனை யுடன் பள்ளி குழந்தை களுக்கு காலை காலை உணவு திட்டம் செயல்படுத்தி உள்ளார் வரும் செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதி பேரறிஞர் அண்ணாபிறந்தநாளில் குடும்பத் தலைவிக்கு மகளிர் உரிமை திட்டத்தில் மாதம் 1000 ரூபாய் திட்டத்தை அறிவித்து வழங்க உள்ளார்கள்.பிஜேபியில் வாக்கு கேட்பதற்கு கூட ஆளில்லாத ஒரு நிலை தமிழகத்தில் ஏற்பட்டுள்ளது காரணம் அத்தனை திட்டங்களையும் செயல்படுத்தியஒரு உந்து சக்தி நம்மிடம் உள்ளதாகவும் விலை வாசி உயர்வு வேலையில்லா திண்டாட்டம் விவசாயிகளை வஞ்சித்தபிரதமர் மோடியின் பட்டியல் ஒரு பக்கமும் விவசாயிக ளுக்கு பல்வேறு அற்புதமான திட்டங்களை அறிவித்து முதலமைச்சரின் திட்டங்கள் ஒரு பட்டியலாக தேர்தல் களத்தில் நாம் முன் வைப்போம்.தமிழகத்தில் புதுவை உட்பட 40 தொகுதிகளிலும் மாபெரும் வெற்றி பெறுவோம். சில இடங்களில் பிஜேபியுடன் கூட்டணி வைக்கும் கட்சிகள் டெபாசிட் இழக்கும் நிலை ஏற்படும் என அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள செஞ்சி, மயிலம், திண்டிவனம், ஆகிய மூன்று தொகுதிகளிலும் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு சிலை அமைக்கஇடம் தேர்வு செய்வது எனவும்,

விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர, பேரூர்,பகுதிகளில் செயல் வீரர்கள் கூட்டம் தொடர்ந்து நடத்துவது எனவும்

வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு அனைத்து ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி கழகங்களில் பாகமுகவர்கள்கூட்டங்கள் நடத்துவது, அனைத்து ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி கழகங்களில்இளைஞர் அணி சார்பில் இல்லந்தேடி சென்று அதிக அளவில் புதிய உறுப்பினர்கள் சேர்ப்பது,விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மூத்த கழக முன்னோடிகளை தேர்வு செய்துவிழுப்புரம் வடக்கு மாவட்டத்தின் சார்பாக பொற்கிழிவழங்குவது,உலக அளவில் நிலவின் தென் துருவப் பகுதியில் சந்திரயான் 3 வின் கலத்தை கடந்த 23ஆம் தேதி முதன் முதலாக வெற்றிகரமாக ஆராய்ச்சிக்காக இறக்கிய இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கும் அந்தத் திட்ட இயக்குனராக செயலாற்றி இந்திய நாட்டிற்கும் தமிழ்நாட்டுக்கும் பெருமை சேர்த்த விழுப்புரம் மாவட்டத்தைசேர்ந்த வீரமுத்துவேலுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தும்,விளையாட்டுத் துறை அமைச்சராக உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு நடந்த உலக செஸ் விளையாட்டு போட்டியில் உலகில் இரண்டாவது இடத்தில் வெற்றி பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த இளம் வயது வீரர் பிரக்ஞானந்தாவிற்குவிழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், சீதாபதி சொக்கலிங்கம், செந்தமிழ் செல்வன், செஞ்சி சிவா, நெடுஞ்செழியன், சீனி சின்னராஜ், கள் செல்வராஜ், மணிவண்ணன், வீடூர் ரவி,சாந்தி ஏழுமலை, விஜயராகவன், பச்சையப்பன், நாராயண மூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், அண்ணாதுரை, துரை, இளம்வழுதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. வழக்கறிஞர் அணி

# புதியதாக நியமிக்கப்பட்ட மாவட்ட தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

## கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி அறிவிப்பு!

தி.மு.க. வழக்கறிஞர் அணி மாவட்ட தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் 2.9.2023 சனிக்கிழமை காலை 9.00 மணி அளவில், சென்னை, எழும்பூர், இம்பிரீயல் ஓட்டலில் உள்ள “ஃபயஸ் மகாலில்”, எனது தலைமையில், கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணை பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ரகுபதி, சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு, விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி., சட்டத்துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை ஆகியோர் சிறப்புரையாற்றிட நடைபெறும்.

இக்கூட்டத்தில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள், தலைமைக் கழக வழக்கறிஞர்கள் மற்றும் புதியதாக நியமிக்கப்பட்ட மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா.

2. புதிய உறுப்பினர்கள் சேர்த்தல், புதுப்பித்தல்

3. புதியதாக நியமிக்கப்பட்ட நிர்வாகிகள் அறிமுகம், குறித்து.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை-18.
நாள்: 29.8.2023.

**என்.ஆர்.இளங்கோ, எம்.பி.**
செயலாளர்,
தி.மு.க. சட்டத்துறை.

### துணை பொதுச்செயலாளர் ஆ.இராசா தலைமை!

# பெரம்பலூர் - அரியலூர் மாவட்ட இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர் சா.சி. சிவசங்கர் - குன்னம் சி.இராஜேந்திரன் - பிரபாகரன் முன்னிலை!

பெரம்பலூர், ஆக.30-

மாநில இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பெரம்பலூர் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆய்வு கூட்டம் முடிந்த பிறகு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

தமிழகத்தில் 12 ம்வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் ஏழை எளிய மக்கள் மருத்துவராக வேண்டும் என நுழைவு தேர்வினை ரத்து செய்தது தி.மு.க. அரசு தான். முன்னாள் முதல்வர் ஜெயலலிதா இருந்த வரை தமிழகத்தில் நீட் தேர்வு கொண்டுவரப்படவில்லை, அதன் பின்னர் தான் அ.தி.மு.க. ஆட்சியில் தான் நீட் தேர்வு கொண்டுவரப்பட்டது. இந்த நீட் தேர்வால் இதுவரை 21 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இதற்கு காரணம் மத்திய பா.ஜ.க. அரசும், அ.தி.மு.க. அரசும் தான். தமிழகத்தில் நீட் தேர்வு ரத்து செய்யவேண்டும் என சட்டசபையில் 2 முறை தீர்மானம் நிறைவேற்றி கவர்னர், ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இந்த நீட் தேர்வு ரத்து ஆகும் வரை தொடர் போராட்டம் நடத்தப்படும்.

இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழகத்தில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. 31 ஆயிரம் அரசு பள்ளிகளில் 1ம்வகுப்பு முதல் 5ம்வகுப்பு வரை பயிலும் 17 லட்சம் மாணவர்கள் பயன்பெறுகின்றனர். இத்திட்டம் மிகபெரிய வரவேற்பை பெற்றுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி அவரது நெருங்கிய நண்பர் அதானி இல்லாமல் எங்கும் செல்லமாட்டார். இந்தியாவில் உள்ள அனைத்து பொதுத்துறையும் அதானியிடம் கொடுக்கப்பட்டுள்ளது. அதானி விமான நிலையம், ரயில்வே ஸ்டேசன், போர்ட், ஸ்டேடியம் என அனைத்தும் வந்து விட்டது. உலக பணக்காரர்களில் இரண்டாவது பணக்காரர் அதானி தான். சி.ஏ.ஐ. மத்திய, மாநில அரசின் வரவு செலவு பட்டியலை தணிக்கை செய்யும் அமைப்பு . இந்த அமைப்பு தணிக்கை செய்து வெளியிட்ட அறிக்கையில் துவராக விரைவு சாலை திட்டத்தில் ஒரு கிலோ மீட்டர் தூரம் வரை சாலை அமைக்க 18 கோடி செலவு செய்ய அனுமதி உள்ளது. ஆனால் இதில் ஒரு கிலோ மீட்டர் தூரத்தை 6 வழிச்சாலை என கணக்கு காண்பித்து 250 கோடி செலவு செய்துள்ளதாக அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் இறந்து போன 88 ஆயிரம் பேருக்கு மருத்துவ காப்பீடு தொகை கொடுத்துள்ளனர். 6 சுங்கசாடியில் 120 கோடி முறைகேடாக மக்களிடமிருந்து கொள்ளையடித்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது. நாங்கள் மோடிக்கும் பயப்படமாட்டோம். உங்களது இ.டி, சி.பி.ஐ, ஐ.டி. போன்றவற்றிற்கும் பயப்படமாட்டோம்.

பா.ஜ.க. அரசு ஆளும்கட்சியாக உள்ள மணிப்பூர் மாநிலத்தில் கடந்த 5 மாதங்களாக நடந்து வரும் கலவரத்தில் 250க்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர். மணிப்பூரைச் சேர்ந்த 18 விளையாட்டு வீரர்கள் தமிழகத்தில் பயிற்சி பெற்று வருகின்றனர். அவர்களுக்கு தேவையான அனைத்து வசதியினையும் செய்து தரப்பட்டுள்ளது.

வரும் 2024ம் நடக்கும் எம்.பி தேர்தலில் பா.ஜ.க.வும், அ.தி.மு.க. வையும் ஒழித்ததாக வேண்டும். இந்த தேர்தலில் 40க்கு 40 தொகுதியிலும் வெற்றிபெற இளைஞரணியினர் பாடுபடவேண்டும். சேலத்தில் வரும் டிசம்பர் 13ம் தேதி தி.மு.க. இளைஞரணி மாநாடு நடத்தப்படவுள்ளது. இந்த மாநாட்டில் இளைஞரணியினர் அனைவரும் குடும்பத்தோடு வந்து கலந்து கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

அதன் பிறகு பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனையில் நோயாளிகளிடம் சிகிச்சை தரம் குறித்து கேட்டறிந்து, அங்கு வழங்கப்பட்ட உணவை சாப்பிட்டுப் பார்த்தார்.

அரசுக் கல்லூரி மாணவர்கள் விடுதி, அரசு ஆதிதிராவிடர் நலப் பள்ளி மாணவர்கள் விடுதிகளில் உணவின் தரம் குறித்து விடுதி மாணவர்களிடம் கேட்டறிந்து, கழிவறைகளையும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டார்.

பெரம்பலூரில் பள்ளி மாணவர்களின் கோரிக்கையை ஏற்று விளையாட்டு உபகரணங்களை உடனடியாக வாங்கி வந்து அவர்களுக்கு வழங்கினார்.

கூட்டத்தில், கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா, போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்ட ஆட்சியர் க.கற்பகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர், அரியலூர் மாவட்ட இளைஞரணி சார்பில் ஒருகோடி நிதி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு இதில் முதற்கட்டமாக ரூ.25 லட்சத்திற்கான காசோலை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கப்பட்டது. இதில் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



நெல்லை மாநகராட்சி வளாகத்தில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலை சிதிலமடைந்ததை சரி செய்து முழு திருஉருவச்சிலை அமைத்திடவும் அருகில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் புதிய திருவுருவுச்சிலை நிறுவவும் வலியுறுத்தி நெல்லை மாநகராட்சி ஆணையர் வ.சிவகிருஷ்ணமூர்த்தியிடம் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் கோரிக்கை மனு வழங்கினார். உடன் மாலை ராஜா, விஜிலா சத்யானந்த், லெட்சுமணன், பேச்சிப்பாண்டியன், முருகன், சுரேஷ், தர்மன், கிரிஜா குமார், அருண்குமார், வில்சன் மணித்துரை, கருப்பசாமி கோட்டையப்பன், நவநீதன், அனிதா,முருகன்,இசக்கி பாண்டியன் ஆகியோர் உள்ளனர்.

# தமிழர்களின் பண்பாட்டு வேர்களைத் தேடி!

**தொ**ன்மைக் காலம் தொடங்கி, தமிழர் இனம் தனக்கென்ற தனித்த வாழ்வியல் நாகரிகத்தையும் பண்பாட்டையும் வளர்த்து வந்துள்ளனர். தமிழர்களின் நாகரிகம் ஆழ்கடந்து அயல் நாடுகளிலும் பரவியுள்ளன என்பதற்கான சான்றுகளும், தடயங்களும் இன்றும் காணலாம். பழந்தமிழரின் வாழ்க்கை முறைகளையும் பண்பாட்டையும் அறிந்து கொள்வதற்கு சங்க இலக்கியங்களும், அகழாய்வு ஆதாரங்களும் நமக்கு பெரிதும் பயன்படுகின்றன. சங்க இலக்கியங்கள் பல அரிய வாழ்வியல் அறநெறிகளை வெளிப்படுத்துகின்றன.

அறம், பொருள், இன்பம் என்ற வாழ்வியல் தத்துவங்களின் அடிப்படையில் அமைந்த இலக்கியங்கள்.

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர் தர வாரா"**

என்ற மிக உயர்ந்த மனிதநேயக் கோட்பாட்டை சங்கப்புலவர் கணியன் பூங்குன்றனார் தன் பாடலில் தெரிவிக்கிறார்.

**"ஒன்றே குலம், ஒருவனே தேவன்**
**நன்றே நினைமின் நமன் இல்லை நாணாமே"**

என்பது திருமூலரின் திருவாக்கு.

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான். (குறள் 972)**

மனித குலம் முழுமையும் ஒன்றுதான் - தாழ்ந்தவர் என்ற பாகுபாடு பிறப்பில் இல்லை, இறைவனும் ஒருவனே. எப்போதும் எவருக்கும் நல்லதையே நினையுங்கள் ஏழையின்

சிரிப்பில் இறைவனைக் காணுங்கள் என்ற உன்னத தத்துவத்தை தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் கொள்கையாக நமக்கு தந்துள்ளார்.

பல நூற்றாண்டுகள் காலனியாதிக்கம், ஏகாதிபத்தியம் மற்றும் அடிமை முறைகளை கடைபிடித்துவிட்டு, இன்று தனிமனித உரிமைகளுக்காக குரல் கொடுக்கிறது மேற்கத்திய நாடுகள். ஆனால் தமிழ் சமூகம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஏற்றத்தாழ்வுகளற்ற சமத்துவ சமூக அமைப்புகள் கருத்தை பறைசாற்றிய வான்புகழ் பெற்ற திருவள்ளுவர் வாழ்ந்ததும் இத்தமிழ் நிலமே!

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு. (குறள் 423)**

எத்தகைய கருத்தை எவர் சொன்னாலும் அக்கருத்தின் உண்மையை ஆராய்ந்த தெளிவது தான் அறிவுடைமையாகும் என்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் உரை எழுதியுள்ளார். இதைவிட ஒரு சிறந்த பகுத்தறிவு விளக்கத்தை யார் கூற இயலும்? எனவே பண்டைய காலம் முதல் பகுத்தாய்வு என்ற தமிழர்களின் பண்பாட்டு மரபில் ஒன்றாகும் என்பதை நாம் அறிகிறோம். தமிழர்களுக்கு தங்கள் இனத்தின் தோற்றம் பற்றிய சரியான புரிதல் இருக்க வேண்டும். "கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த குடி தமிழ்க்குடி" என்ற கூற்றை மெய்ப்பிக்க இன்று பல ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது. அகழ்வாராய்ச்சிகளும் அந்தக் கூற்றை மெய்ப்பித்துக் கொண்டிருக்கின்றன. குமரிக்கண்டம் என்பதுதான் தமிழகத்தின் தாயகம் என்றும் அறியப்படுகிறது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இங்கே மிக உயர்ந்த நாகரிகம் பரவியிருந்தாக வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். இதன் குறிப்புகள் புறநானூற்றிலும், சிலப்பதி காரத்திலும் இருக்கிறது. எனவே உலகின் தொன்மையான குடி தமிழ்குடி என்றும் இங்கிருந்துதான் மக்கள் பல்வேறு நாடுகளுக்கு புலம்பெயர்ந்தனர் என்றும் கூறப்படுகிறது. சிலர் தமிழகத்தை விட்டு வெளியேறி சென்று மத்திய தரைக் கடற் பகுதியில் குடியேறி பின்பு பல நாகரிகங்கள் வளர்வதற்கு அடித்தளம் அமைத்தனர் என்றும் சுமேரிய மெசபடோமியா மக்களின் மொழி, உருவ ஒற்றுமை, அவர்களின் கலை, வரலாற்று நினைவு சின்னங்கள் திராவிட இனத்தோடு ஒன்றியிருப்பதாக கூறப்படுகிறது. பி.டி. சீனிவாசன் ஐயங்கார்தமிழர்கள் வரலாறு (P.T.Srinivas Iyengar's History Of the Tamils) என்ற புத்தகத்திலும் மற்றும் டி.ஆர். சேஷா ஐயங்காரின் திராவிட இந்தியா (T.R. Seshya Iyengar's Dravidian India) என்ற புத்தகத்திலும் இந்த கொள்கைக்கு பேராதரவு கொடுத்துள்ளனர்.

குமரிக்கண்டத்தை ஆட்சி செய்த முற்காலப் பாண்டியர்கள் காலத்தில் தான் தமிழ் இலக்கிய கல்வியாளர்கள் உருவாக்கிய முதல் இரண்டு சங்கங்கள் இருந்ததாக இங்கே இறையனார் அகப்பொருள் உரை என்ற இலக்கண நூலில் கூறப்பட்டுள்ளது. மேலும் வில்லியம் ஸ்காட் (William Scott) என்ற ஆங்கிலேயே அறிஞர் (The Lost Land of Lemuria) என்ற புத்தகத்தில் தெளிவாக விவரித்துள்ளார். அதுவே "குமரிக்கண்டம்" என்று பெயர் பெற்றுள்ளது. "திரைகடலோடியும் திரவியம்தேடு" என்பது போல் பண்டைய தமிழர்கள் கிரேக்கம், ரோமாபுரி, எகிப்து,பாலஸ்தீனம்,மெசப்படோமியா, பாபிலோனியா ஆகிய நாடுகளுடன் வணிக தொடர்பு வைத்திருந்தனர் எரித்திரியக்கடல் வழிகையேடு என்ற வரலாற்று நூல் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது. இதில் மேலை நாடுகளுடன் தமிழ் மக்கள் கொண்டிருந்த வணிக தொடர்புகளைக் குறிப்பிடுகிறது.

Pliny the Elder 6 The National History LDMILD Ptolemy's Geographical accounts

நூல்களில் பண்டைய தமிழகத்தில் வணிகம் நடைபெற்ற பல்வேறு துறைமுகங்கள் பற்றிய குறிப்புள்ளது.

**யவனர் வந்த வினைமாண் நன்கலம்**
**பொன்னோடு வந்து கறியொடு பெயரும்**
**வளங்கெழு முசிறி (அகம் 149:911)**

யவனர்கள் தங்கள் கப்பலின் பொன்னைக் தமிழகத்துக்கு கொண்டுவந்தனர். அவர்கள் தாய் நாடு திரும்பியபோது அதே கப்பலில் யானையையும், யானைத்தந்தத்தையும் ஏற்றிச்சென்றனர்.

பண்டைய மதுரை ஒரு வணிக நகரமாக விளங்கியது. ரோமானிய வணிகர்கள் பலர் பண்டைய மதுரையில் யவனச்சேரிகளை அமைத்து வணிகம் செய்தனர். இவர்கள் வெளிநாட்டினர்களுக்கு உதவியாக இருந்தனர், மேலும் இவர்கள் மன்னர்களின் மெய்க்காப்பாளர்களாக இருந்துள்ளனர். மதுரையில் தங்கியிருந்த யவனர்களிடமிருந்து தான் தமிழகத்தினைப் பற்றிய செய்திகளை தாம் கேட்டறிந்ததாகப் பிளினி கூறுகிறார். அதேபோல் நைல் நதியின் துறைமுகப் பட்டினமான அலெக்ஸான்ட்ரியாவில் நூற்றாண்டுகளில் தமிழர்கள் வாழ்ந்து வந்தனர். எனவே வாஸ்கோடகாமா தான் தென்னிந்தியாவிற்கு கடல் வழியாக வந்த முதல் ஐரோப்பியர் என்ற கூற்று தவறானதாகும்.

### தமிழர் பண்பாடு

மொழி என்பது தமிழர்களின் உயிர்நாடியாக இருந்துவந்துள்ளது. தமிழைப் போற்றி வளர்ப்பது தமிழகப் புலவர்களை பாராட்டி பரிசுகள் வழங்குவது. தமிழ் மன்னர்களின் கடமைகளில் ஒன்றாக இருந்து வந்திருக்கிறது. மொழிக்கு மட்டுமின்றி மக்களின் வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்து கொண்ட பெருமை பழந்தமிழரைச் சாரும். தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே திணைகள் வழக்கில் இருந்து வந்தன. மொழியானது பல காலம் வளர்ச்சி பெற்ற பிறகு தான் அதற்கு இலக்கண விதிமுறைகள் வகுக்க முடியும், அதேபோல் வாழ்க்கையிலும் வளர்ச்சிபெற்று நிலைத்து வாழும் சமூகத்திற்கு தான் சமூக முறையைக்கட்டமைக்க முடியும். எனவேபொருள்இலக்கணம்தோன்றுவதற்கு முன்பே மக்கள் உயர்ந்த வாழ்க்கை நெறியைப் பின்பற்றி வந்தனர் என்பதில் ஐயமில்லை!



முனைவர் திருமதி.தேன்மொழி பொன்முத்துராமலிங்கம்,
நான் முதல்வன் ஒருங்கிணைப்பாளர்,
இணை பேராசிரியர்,
வரலாற்றுத் துறை,
இராணி மேரி கல்லூரி,
சென்னை

வேளாண்மை, வணிகம், காதல் மற்றும் வீரம் தமிழர்களின் முக்கியப் பண்பாடாக இருந்தது. இதைத்தான் சங்க இலக்கியங்கள் பாராட்டின. பழந்தமிழர்கள் இல்லற வாழ்க்கையைப் பெரிதும் போற்றி வந்தனர். ஆண், பெண் இருவரும் கற்பு நெறியில் வழுவாமல் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்பதே தமிழரின் பண்பாடு காதல் திருமணங்கள் நடைபெற்றதற்கான சான்றுகள் உள்ளன. சாதி வேறுபாடுகளற்ற சமூகமாக இருந்துள்ளது. மேலும் திருமணங்களில் மணமகன், மணமகளுக்கு தாலி கட்டும் வழக்கம் கி.பி. பத்தாம் நூற்றாண்டுக்கு முன்பு ஏற்படவில்லை. இந்த வழக்கத்தை தெரிவிக்கும் முதல் கல்வெட்டு கி.பி.958 ஆம் ஆண்டுக்குரியதாகும்.

### கடவுளும் சமயமும்

பண்டைய தமிழ் சமூகம் அறத்தைப் போற்றக் கூடிய ஐந்து திணைகளுக்கும் ஐந்து கடவுள்கள் வழிப்பாட்டுக் குரியவர்களாக இருந்தனர். சேயோன், மாயோன், வேந்தன்,வருணன், கொற்றவை ஆகிய இயற்கை இயைந்த தெய்வங்களை வழிபட்டனர்.

இப்படி பன்முகத்தன்மையை ஏற்கக் கூடிய

மரபாக இருந்தது. தமிழக மெய்யியல் கோட்பாட்டில் முன்னோர்களை வழிபட கூடிய வழக்கம் தமிழர்கள் இடையே இருந்தது. வீரத்தை போற்றக் கூடிய சமூகம் என்பதால் இறந்த வீரர்களுடைய நினைவிடத்தில் நினைவுக் கல்நட்டு வைக்கப்பட்டது அதுதான் நடுகல் ஆகும். நடுகல் வழிபாடு தான் கால மாற்றத்தால் சிறு தெய்வங்களாக பரிணாமம் பெற்றிருக்கிறது.

### பெண்களை போற்றக்கூடிய சமூகம்

பழந்தமிழர்கள் பல இனக்குழுவாக வாழ்ந்த காலகட்டத்தில் அவ்வினக்குழுவுக்கு தாயே தலைமை ஏற்றாள். அக்கால கட்டத்தில் இக்குழுவினர் முதன்முதலாக வேளாண்மைத் தொழிலில் வெற்றி பெற்றுத் திகழ்ந்தனர். மேலும் அச்சமுதாயம் தாய் வழிச் சமுதாயம் எனப்பட்டது. தாயே குடும்பத்தின் தலைவியாக பண்டைய தமிழ் சமுதாயத்திற்கு வழிகாட்டினர்.

மனித சமூகத்தில் மக்களின் பெருக்கம், உணவு உற்பத்திப் பெருக்கம், கால்நடை பெருக்கம், மழை இவற்றிற்காகவும் நோய்களிலிருந்து காக்கவும் தாய்தெய்வ வழிபாடு தோன்றியதாக பேராசிரியர் தொ. பரமசிவன் கூறுகிறார்.

சங்க இலக்கியங்களில் தாய்தெய்வ வழிபாடு காடுகளில் தான் நடந்திருக்கிறது. இப்போது காடுகளில் சென்று வணங்குவது என்பது அரிதாகி விட்டது.

ஆண்களைப் போல் பெண் கவிஞர்களும் கவிஞர்களும் பெண் துறவிகளும் வாழ்ந்திருந்தனர். சிலப்பதிகாரத்தில் வருகின்ற கவுத்தியடிகள் கூட "ஆசிவகப் பெண் துறவி" என்று கூறப்படுகிறது.

### தமிழக மெய்யியல் கோட்பாடு

இந்திய மெய்யியல் கோட்பாட்டில் பொருள் முதல் வாத கோட்பாடு மற்றும் கருத்து முதல் வாத கோட்பாடு என்று இரு பிரிவுகளாக இருக்கின்றது.

சடங்குகள் மற்றும் வேதங்களையும், வேத அதிகாரங்களையும் மறுக்கக் கூடியது "நாத்திக மரபு". தந்தை பெரியாரின் சிந்தனை மரபுகள் பண்டைய இந்தியாவிலும் முக்கியமாக தமிழகத்தில் பலராலும் பின்பற்றப்பட்டு வந்து இருக்கின்றது. பொருள் முதல் வாத கோட்பாட்டின் அடிப்படையில் இந்த உலகம் அணுக்களால் ஆனது, மனித வாழ்க்கையில் ஆன்மா, கடவுள், மறு பிறவி, கர்மவினை என்பதெல்லாம் கிடையாது. வாழ்க்கையில் எதுவுமே நிரந்தரமானது கிடையாது, எல்லாம் மாறக் கூடியது. மாற்றம் ஒன்றே மாறாதது. சரியான பகுத்தாய்வும் அறிவு ஒன்றே மனிதனை துன்பத்திலிருந்து மீட்கக்கூடியது. இதைத்தான் ஆங்கிலத்தில் (Idealism VS Materialism) அழைக்கப்படுகிறது. இந்தக் கோட்பாட்டை தான் உலகாயுதம் (Lokayutha) என்ற தனது புத்தகத்தில் (Debi Prasad Chatopadya) என்ற மார்க்சிய மெய்யியலாளர் எடுத்து விளக்குகிறார்.

(The Wonder that was India) என்ற புத்தகத்தில் A.L. Bhasam அவர்கள் Ajeevikaஆசிவகம் என்ற பொருள் முதல் வாத கோட்பாட்டை கடைபிடித்த மதத்தை பற்றி கூறுகிறார். இதை தான் தமிழில் பேராசிரியர் நெடுஞ்செழியன் அவர்கள் ஆசிவகம் தமிழர்களுடைய ஆதி மதம், அதை தான் ஒவ்வொரு ஊரிலும் அய்யனார் வழிபாடாக கடைபிடிக்கப்படுகின்றது. ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தமிழர் வாழ்வை செம்மைப்படுத்திய சமயம் ஆசிவகம் என்று கூறும் பேராசிரியர் நெடுஞ்செழியன், ஆசிவகத்தின் தொல் எச்சங்களையும் தன் தமிழறிவின் துணிவுடன் நுட்பமாக எழுதியுள்ளார். ஆசிவகம் என்பது தமிழர்களின் ஆதிச்சமயம், புராணக் கதைகளைக் கொண்டு கட்டமைக்கப்படாத அறிவார்ந்த வாழ்க்கை முறையை சொல்ல கூடியது. தென்மாவட்டங்களில் கடைபிடிக்க கூடிய முளைப்பாரி விழா, இறப்பை கூடிக்கொண்டாடி அடக்கம் செய்வது ஆகியவை ஆசீவக வழிபாட்டின் தொடர்ச்சியாக கருதப்படுகின்றது. தமிழ் சமூகத்தில் தொல்குடி மரபுகள் சில தொடர்ந்து கொண்டே தான் இருக்கிறது. ஆனால் சில மரபுகள் சாதிய அமைப்புகளால் அழிக்கப்பட்டுவிட்டன என்பதையும் அவர் விளக்குகிறார்.

### தமிழர்களின் பெருமை கீழடி

சங்க இலக்கியம் போன்ற வளம் மிகுந்த இலக்கியச் செல்வம் நம்மிடையே இருந்தும், தொல்லியல் ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டிராத நிலையில் தமிழ் நிலத்தின் தொன்மை வரலாற்று ஆய்வாளர்களால் ஏற்றுக் கொள்ளப்படாமல் இருந்து வந்தது. அந்த பாராமுகத்தை கீழடி திருப்பிப்போட்டது. வைகை நதி நாகரிகம் 2,600 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்லியல் எச்சங்களுடன் தமிழ்நாட்டின் வரலாற்று தொன்மையான ஆதாரங்களை முன்வைத்து உலகத்தை திருப்பி பார்க்க வைத்துள்ளது.

கீழடியில் கிடைத்த தொல்லியல் சான்றுகள் மூலம் கி.பி. 6 ஆம் நூற்றாண்டிலேயே எழுத்தறிவு பெற்ற நகர நாகரிகத்துடன் தமிழர்கள் வாழ்ந்திருப்பதை உலகுக்கு பறைசாற்றும் வகையில் நமது முதலமைச்சர் அவர்கள் ரூ.188 கோடி பொருட்செலவில் அருங்காட்சியகத்தை திறந்துள்ளார். தமிழர்களின் பண்டைய வரலாற்றின் அடையாளச் சின்னமான கீழடி, தமிழர் பெருமையை உலகு எங்கும் கொண்டு சென்றுள்ளது. கீழடி பல சோதனைகளை தாண்டி தமிழர்களின் கனவு மெய்ப்பட செய்த நமது முதலமைச்சர் அவர்களை வரலாற்றுப் பேராசிரியர் என்ற முறையிலும் உலகெங்கும் வாழும் தமிழர்களின் சார்பாகவும் வாழ்வாங்கு வாழ வாழ்த்தி வணங்குகின்றோம்.

# மாணவர்தம் பசிப்பிணி மருத்துவர் மாமுதல்வரைக் காலங்கள் பாடும்!



தலைமுறை தலைமுறை தமிழ்நாடு
தழைக்கநம் முதல்வரின் மாணவர்
நிலைநிறை வயிற்றுக்குச் சோறிடல்
நிகரிலாத் திட்டம் வியப்பென்னே!

அற்றார் அழிபசி தீர்த்தலே
அகில வைப்பு நிதியென
வற்றா அமுதத் திருக்குறள்
வரையறுத்(து) அய்யன் எழுதினார்!

பற்றிலா வள்ளலார் அருளண்ணல்
பசிப்பிணி தீர்த்தலே வையகம்
மற்றைய அனைத்திலும் முதன்மையென
வயிற்றுக்(கு) உணவீதல் உயிர்க்காப்பே!

உன்னத முதன்மைநம் முதல்வரே
உயிர்தனைக் காக்கும் இறையென
மன்பதைப் **பசிப்பிணி மருத்துவர்**
மாநிலத் தமிழ்நாடு தோன்றலே!

இருளிடை வந்த கதிர்மதி
இளம்தளிர் மாணவர் மகிழ்வொளி
அருளிடை பூத்தவோர் அறநெறி
அணிஈகை முதல்வரின் உயர்வழி!

இரக்கமே உருவாக இணையிலா
**இஸ்டாலின்**நம் முதல்வரின் கருணையால்
வரமெனத் தவமெனப் பயில்பள்ளி
மாணவச் சிறுவர்கள் மகிழ்வம்மா!

பக்கமே அமர்ந்தே ஊட்டுவார்
பயிர்வாடும் நிலைபெய் முகிலென
செக்கவான் உதய ஒளியென
சிறுவர்சிந் தைஅமர் முதல்வரே!

காலங்கள் பாடிடும் சாதனை
கலைஞர்தம் வழிவந்த போதனை
இலாநிலை வறுமை வேதனை
**இஸ்டாலின்**மா முதல்வரின் மாற்றுவினை!

நெருப்பிலும் துஞ்சலாம் பசியெனும்
நெருப்பில் பயிலுதல் இயலாதே
பெருந்தகை முதல்வர் அறிந்திதைப்
பிள்ளைகள் பசிப்பிணி மருத்துவர்!

வையகம் ஈடிலா அருஞ்செயல்
வரலாறு படைத்தநம் முதல்வரே
கையகம் அமுதாகும் மாணவர்
காத்துநம் தலைமுறைகள் ஓங்கவே!



பெருங்கவிக்கோ
**வா.மு.சேதுராமன்**

## உப்பிலியபுரம் தெற்கு ஒன்றியச் செயலாளர்

# அர.ந.அசோகனின் சகோதரர் அர.ந.அரவிந்தன் மறைவு!

## அமைச்சர் கே.என்.நேரு அஞ்சலி!

திருச்சி, ஆக. 30 - திருச்சி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட உப்பிலியபுரம் முன்னாள் ஒன்றிய செயலாளரும் அர. நடராஜன் இரண்டாவது மகனும், உப்பிலியபுரம் தெற்கு ஒன்றியச் செயலாளர் அர. ந. அசோகனின் அண்ணனுமான அர. ந. அரவிந்தன் நேற்று முன்தினம் (28.8.2023 - திங்கட்கிழமை) மாலை 3.00 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நேற்று (29.8.2023) மதியம் 2.00 மணியளவில் துறையூர் அம்மாபட்டி ரோடு தேவாங்கர் நகரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

அன்னாரது மறைவு செய்தி அறிந்து கழக முதன்மைச் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே என் நேரு, அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். மேலும் வடக்கு மாவட்ட செயலாளர் காடுவெட்டி தியாகராஜன், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாவட்ட ஊராட்சி தலைவர் தர்மன் ராஜேந்திரன் , மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் நகரச் செயலாளர் முரளி, ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, முத்துச்செல்வன், வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கார்த்திக் கஷ்டமஸ் மகாலிங்கம், கிட்டப்பா, ரெங்கநாதபுரம் கார்த்தி உட்பட கழக நிர்வாகிகள் பலர் அஞ்சலி செலுத்தினர்.

## தி.மு.க சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு

# மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

## டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு

தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாவட்ட & மாநகர தலைவர், துணைத்தலைவர், அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் கூட்டம் வருகிற 6.9.2023 புதன்கிழமை அன்று சென்னை ராயப்பேட்டை புதிய கல்லூரி (The New College Marriage hall) திருமண மண்டபத்தில்,

காலை 10 மணிக்கு துவங்கும் இந்நிகழ்வில் கழக பொதுச்செயலாளர்; நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழக துணைப் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர்; கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு பொறுப்பாளர் அந்தியூர் செல்வராஜ், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி.கே.எஸ். மஸ்தான், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றவிருக் கின்றனர்.

இதில், அனைத்து மாவட்ட, மாநகர கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்:** முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை ஒட்டி, தலைவரின் சமூகநீதி மற்றும் மதச்சார்பின்மை கோட்பாடுகள், கொள்கைகள், செயல்பாடுகள்

உள்ளூர் நிகழ்ச்சிகளாக, ஆவணப்படங்களாக. கருத்தரங்கமாக, சமத்துவம் போற்றும் சமபந்தி உபசரிப்பாக நடத்துவது குறித்து

**டாக்டர். அ. சுபேர்கான்**
செயலாளர்
தி.மு.க. சிறுபான்மையினர்
நல உரிமைப் பிரிவு.



ஒருங்கிணைந்த தென்காசி மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்று சிறப்பிக்க தென்காசிக்கு வருகிற 05.09.2023 அன்று rrrவருகை தருவதை முன்னிட்டும் தென்காசி இசக்கி மஹாலில் மாவட்ட அவைத்தலைவர்கள் சுந்தர மகாலிங்கம்,பத்மநாபன் ஆகியோர் தலைமையில் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன், வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம். எல்.ஏ. முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று ஆலோசனை வழங்கி உரையாற்றினார். உடன் தனுஷ் எம்.குமார் எம்.பி. முன்னாள் அமைச்சர் தங்கவேலு,முத்துப்பாண்டியன், ஆறுமுகசாமி, சேக்தாவுது, சீனிவாசன், செல்லத்துரை, பரமகுரு, சாதிர், அப்துல்காதர், சாமிதுரை, ஷெரிப், சரவணன், முத்துசெல்வி, ராஜன் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.




கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையை ஏற்றும் சிறப்பான நிர்வாக திறமையை கருத்தில் கொண்டும் நெல்லை மத்திய மாவட்டக் கழக அலுவலகத்தில் மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் முன்னிலையில் மேலப்பாளையம் அ.தி.மு.க. இளைஞர் பாசறை தலைவர் பாலகிருஷ்ணன் தலைமையில் 31 வது வார்டு இளைஞர்கள் 30 பேர் கழகத்தில் தங்களை இணைத்து கொண்டனர். உடன் மாலைராஜா, கருப்புசாமி, கோட்டையப்பன்,அருள்மணி, அருண்குமார், முகமது மீரான், நவநீதன், பத்மராஜ்,நெல்லை ரவி,கார்டன் சேகர், சுரேஷ், சூப்பர் மணி, கீர்த்தி, காதர் ஒலி, முத்துசாமி உள்பட கழகத்தில் இணைந்த 30 அ.தி.மு.க. இளைஞர்கள் உள்ளனர்.

## சி.ஏ.ஜி-யில் குறிப்பிட்டுள்ள ரூ.7.5 லட்சம் கோடி முறைகேட்டை

# ஒன்றிய அரசிலிருந்து இதுவரை யாரும் மறுக்கவில்லை!

## ஒரே தொலைபேசி எண்ணில் ஏழரை லட்சம் பயனாளிகள் இணைப்பு குறித்து விசாரிக்கப்பட வேண்டும்!

### ‘நியூஸ் 18’ ‘சொல்லதிகாரம்’ விவாத மேடையில் பாலச்சந்தர் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) வலியுறுத்தல்

சென்னை, ஆக.30-

**‘நியூஸ் 18’ தொலைக்காட்சியில், “சி.ஏ.ஜி. அறிக்கையை கையிலெடுத்த மு.க.முதல்வர் ஸ்டாலின், வேகமெடுக்கிறதா 2024 தேர்தல் யுத்தம்?” என்ற தலைப்பில் நெறியாளர் பா.தமிழரசனைக் கொண்டு நடைபெற்ற “சொல்லதிகாரம்” நிகழ்ச்சியில் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ்.அதிகாரி பாலசந்தர் பேட்டியை இங்கே வெளியிட்டுள்ளோம்.**

**இது பற்றிய விவரம்:**

**நெறியாளர் பா.தமிழரசன்** : சி.ஏ.ஜி.அறிக்கையும் அதனுடைய அம்சங்களும் நாடுதழுவிய அளவில் பரஸ்பர விமர்சனங்களை உருவாக்கியுள்ளது. குறிப்பாக நேற்றைக்கு பேசிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பா.ஜ.க.வின் ஏழு விதமான ஊழல்கள் வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது என்றும், பாரத் மாலா திட்டம், துவாரகா விரைவுப் பாலம் கட்டுமானத் திட்டம், சுங்கச்சாவடி கட்டணங்கள், ஆயூஸ்மான் பாரத் திட்டம், அஷ்யோத்தியா மேம்பாட்டுத் திட்டம், கிராமப்புற அமைச்சகத்தின் ஓய்வுத் திட்டம், எச்.எல்.விமான வடிவமைப்புத் திட்டம் உள்ளிட்ட ஏழு திட்டங்களிலும் பல கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் நடந்துள்ள தாகப் பேசிஇருக்கிறார் இதனை சி.ஏ.ஜி. மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறது என்றும், நிதியைக் கையாளுவதில் மோசடி நடந்துள்ளதாக இந்தச் சி.ஏ.ஜி. அறிக்கை பட்டவர்த்தனமாக தெரிவிக்கிறது என்றும் பேசி இருக்கிறார். குறிப்பாக ஊழல் குறித்துப் பேசுவதற்கு பா.ஜ.க.விற்கு என்ன அருகதை என்ற காட்டமான யோசனத்தையும் முன் வைத்து இருக்கிறார். நாடு தழுவிய அளவில் காங்கிரஸ் உள்ளிட்ட பல எதிர்க்கட்சிகளும் ஏழரை இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் நடைபெற்று இருப்பதாக தொடர்ச்சியான விமர்சனங்களை முன் வைத்து வருகின்றனர்.

அதனை மையமாகக் கொண்டே இந்த சொல்லதிகார நிகழ்ச்சி பயணிக்க இருக்கிறது. நம்மோடு ஐவர் இணைகின்றனர். தி.மு.க.வில் இருந்து செய்தித்தொடர்பாளர் ராஜீவ் காந்தி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து மதுக்கூர் இராமலிங்கம், ஓய்வு பெற்ற மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி பாலச்சந்திரன், ஸ்ரீராம், வடதுசாரி கருத்தாளர் ராமசாமி மையப்பன் ஆகியோர் இணைகின்றனர்.

இந்த சொல்லதிகாரம் நிகழ்ச்சியில் பங்கேற்ற மூத்த ஐ.ஏ.எஸ். (ஓய்வு) அதிகாரி பாலச்சந்தர் அவர்களின் வாதம் வருமாறு :-

**நெறியாளர் தமிழரசன்:** எதிர்க்கட்சிகளின் பார்வையும் பா.ஜ.க. தலைவர்கள் சொல்லக் கூடிய அந்தக் கருத்தையும் நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?

**பாலச்சந்தர் ஐ.ஏ.எஸ். (ஓய்வு)** : சில விஷயங்களை தெளிவுப்படுத்த வேண்டும். 1.76 இலட்சம் கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு என்று சி.ஏ.ஜி.சொல்லவில்லை. அதிகபட்சமாக ஒருலட்சத்து 76 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு இருக்கலாம்என்று தான்சொன்னார்கள். சி.பி.ஐ.வழக்குப் போட்ட போதே 30 ஆயிரம் கோடி ரூபாய் என்று சொன்னார்கள், பலவிதமான யூகங்கள், மீண்டும் ஒரு முறை சி.ஏ.ஜியே நாங்கள் அப்படி சொல்லவே இல்லை, மிக அதிகப்படியாக அப்படி இருந்திருக்கலாம் என்றனர். அது ஒரு யூகம்தான்.

இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால், அதில் அரசுக்கு இழப்பு என்பது உண்மைதான். ஆனால், அதில் ஏன் இழப்பு என்பது முக்கியமான கேள்வி. அரசின் ரோட் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் என்று எல்லாம் இருக்கிறது. இந்த ரோடு டிரான்ஸ்போர்ட் கார்பரேஷன் எது இலாபத்தோடு ஓடுகிறது. அது இலாபத்தோடு ஓட முடியாது. ஏன் என்றால் பப்ளிக் வெல்பேர் ஸ்கீம் அப்படி என்று சொல்லும் போது, நஷ்டத்தை உணர்ந்து, நஷ்டத்தை ஏற்றுக் கொண்டு அதற்கு நிதிஉதவி செய்கிறது எல்லா அரசுகளும். நம் எல்லோருக்கும் தெரியும், இந்த பிரைவெட் செக்டர் மூலமாக மொபைல் போன்கள் எல்லாம் வந்த போது, அவுட் கோயிங் காலுக்கு 12 ரூபாய் ஒரு நிமிடத்துக்கு. இன்கம்மிங் காலுக்கு ஒரு நிமிடத்துக்கு 8 ரூபாய் சார்ஜ் செய்துக்கிட்டு இருந்தாங்க. அப்போது நமது பி.எஸ்.என்.எல். மார்க்கெட்டிங் நுழைந்தது. பப்பிளிக்காக இதே மாதிரி மார்க்கெட்டிங்கில் மோனோ பணி செய்ய பார்க்கும் போது அரசு நிறுவனங்கள் அதில் நுழையும். அரசு நிறுவனங்கள் அதில் நுழையும் போது கட்டணத்தை குறைப்பார்கள்.

இதில் வந்து ஒரு ரூபாயாக இருந்ததை குறைத்து 50 பைசாவாக குறைத்து ஒரு நிமிடத்திற்கு, அதற்குப் பிறகு ஒன்றுமே நிபந்தனை இல்லாமல் எல்லோருமே பேசிக் கொள்ளலாம் என்ற நிலைமை எல்லாம் வரும் பொழுது, இது ஒரு அமைச்சரவையின் முடிவு. எந்த ஒரு தனிப்பட்ட அமைச்சருடைய முடிவும் கிடையாது என்பதெல்லாம் தெளிவு படுத்தப்பட்டு இருக்கிறது. அமைச்சரவை சொன்னது முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்று வைத்துக் கொள்வோம், முதலில் வந்து, தம்பி தமிழரசு இரண்டாயிரம் கோடி ரூபாய் கொடுக்கின்றேன் என்று சொன்னால் அவர்தான் முதலில் வந்தார், அதனை ஏற்றுக் கொண்டு அவருக்கு டெண்டர் கொடுத்துவிடுவோம்.

சி.ஏ.ஜி. என்ன சொல்கிறார், இன்னும் நீங்கள் நான்கு பேரிடம் கேட்டீர்கள் என்றால், அது மூவாயிரம், ஏழாயிரமாக ஆகி இருக்கும் என்கிறார். இது அரசுக்கு தெரியாமல் இல்லை. ஆனால்,அப்படி செய்தால் அந்த ஏழாயிரம் கோடி ரூபாய் கொடுத்து வாங்குகிறவர்கள் அந்தச் சுமையை அப்படியே பொதுமக்கள் மீது சுமத்துவார்கள். ஏன் என்றால் அவர்கள் பணத்தை போட்டு பணத்தை எடுக்க வேண்டும். இதனால் இப்படி ஒரு முடிவு எடுத்தோம் என்று அரசு சொன்னது.



பாலச்சந்தர் ஐ.ஏ.எஸ். (ஓய்வு)



நெறியாளர் பா.தமிழரசன்

உச்சநீதிமன்றம் பற்றி முக்கியமான பாயிண்ட்டை இங்கே ஸ்ரீராம் அவர்கள் கூறினார். ஆமாம் உச்சநீதிமன்றம் எல்லாவற்றையும் கேன்சல் செய்தது. ஏன் என்றால் பெரிய ‘ஸ்டையில் மேட்டே’ வந்து விட்டது. அடுத்த லெவலுக்கு போக 2ஜி, 3ஜி, 4 ஜி இன்றைக்கு 5 ஜி வரைக்கும் வந்து விட்டது. அதனால் இந்த கன்பூஷனை அவாய்ட் செய்வதற்காக முதலில் இதனை ரத்து செய்தது. என்ன சொல்கிறது என்றால் அந்த காண்ட்ராக்ட் அவாயிட் செய்கின்ற விதத்தில் அவர்கள் குறைகளை கண்டுபிடித்து இருக்கலாம். ஒழுங்காக இன்வெஸ்டிகேஷன் நடந்து இருந்தால். ஆனால் கடைசியில் இப்போதைய நிலையில் நீதிமன்றத்தின் தீர்ப்பு என்ன வென்றால் அதில் எந்தத் தவறும் நடைபெறவில்லை என்பதுதான். அரசுக்கு நஷ்டம் என்பது பப்ளிக் வெல்பர்க்காக டெலிகம்யூனிகேசன் கூட வேண்டும்என்பதற்காககொண்டுவந்ததுஎன்றுசொன்னார்கள்.

இதனை எதற்காகச் சொல்கிறேன் என்றால் சில பப்ளிக் ஸ்கீமில் ரேஷனில் அரிசி கொடுப்பது, அல்லது டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனில் வந்து டிக்கெட் விலையைக் குறைப்பது, டெலிபோன் கட்டணங்களை குறைப்பது என்பதெல்லாம் கான்கடென்ஸ் டிசிசன் அப் தி கவர்ன்மெண்ட். அதாவது பாலிசி டெசிசன். உச்சநீதிமன்றம் வந்து சொல்லலாம் இதனால் கவர்ன் மெண்ட்டுக்கு இழப்பு ஏற்பட்டது என்று . கவர்ன்மெண்ட் ஹேஸ் எவ்வரி ரைட் டூ சே நாங்கள் இழப்பை ஏற்றுக் கொள்கிறோம். இதனால் பொதுமக்களுக்கு நன்மை கிடைக்க வேண்டும் என்று அரசு சொல்ல முடியும்.

இது ஒரு பக்கம். நான் 2ஜி பற்றி சொன்னபோது, மிக அதிகபட்சமாக அரசுக்கு 1 இலட்சத்து 76 ஆயிரம் கோடி இழப்பு இருந்திருக்கலாம் என்று சொன்னார்கள்.

இப்போது இங்கே நடந்தது என்னவென்று பார்த்தால் இது ஏற்கனவே வந்து இரண்டு முக்கியமான விஷயங்களை சி.ஏ.ஜி. குறிப்பிட்டு இருக்கு. இந்த கி.மீட்டருக்கு 18.5 கோடி ரூபாய் என்று இருந்ததை 250 கோடி ரூபாய் ஆனது பற்றி குறிப்பிடும் போது சி.ஏ.ஜி. என்ன சொல்கிறார்கள். முதல் இதில் கம்ப்ளீட்டா ஐ வேஸ் போட வேண்டும் என்று சொல்லவில்லையே, மேலே கூடுதலாக போட வேண்டும் என்று சொல்ல வில்லையே, இதற்கு யாருடைய ஒப்புதல் வாங்கினீர்கள், இந்த எஸ்டிமேட் எந்த அளவிற்கு சரியாக இருக்கு. இவை இரண்டும் மிக முக்கியமான கேள்விகள். இது குறித்து நாம் யோசிக்க வேண்டும்.

கட்காரி என்ன பதில் சொன்னார். அந்த அதிகாரிகள் எல்லாம் சரியாக கவனிக்காமல் விட்டு விட்டார்கள். அரையும் குறையுமாக பதில் சொல்லி விட்டார்கள். அதனால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க சொல்லி இருக்கிறேன் என்று இவ்வளவுதானே சொல்லி இருக்கிறார். இவை எல்லாவற்றையும் முறைகேடு என்று சொல்வது தவறு என்று இன்றைக்கு வரைக்கும் ஒன்றிய அரசில் இருந்து யாரும் சொல்லவில்லை என்பதுதானே உண்மை.

அதனால் வந்து அதிகபட்ச இழப்பு என்று சொல்வதற்கும் இந்த காஸ்டு இவ்வளவு அதிகமாக போனதற்கும் ராஜிவ் காந்தி சொன்னமாதிரி எக்ஸ்பெண்டிசர் ஈஸ் பியிங் இன்கோர்ட் அப்படி என்பதற்கும் பெருத்த வேறுபாடு இருக்கு.

**நெறியாளர்:** சரியான தரவுகள் கொடுத்து இருந்தால் இப்படியான ஒரு விஷயமே வெளிவந்திருக்காது என்று தானே நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**பாலச்சந்தர் ஐ.ஏ.எஸ்.(ஓய்வு)** : அப்படி என்று சொல்கிறார்கள், சரியான தரவு என்னவென்று சொல்ல வேண்டும் இல்லையா . சரியான தகவல்கள் கொடுத்து இருந்தால் இப்படி ஒரு சி.ஏ.ஜி.யே வந்திருக்காது. அவர்கள் குழம்பி இருக்க மாட்டார்கள் அப்படி என்று சொல்கிறார்கள். எது சரியான தரவு. அதனை ஏன் கொடுக்காமல் இருக்கிறார்கள். அதனை கொடுக்க வேண்டியது தானே. அவர்கள் கொடுத்ததற்குப் பிறகு தானே நாம் சொல்ல முடியும்.

**நெறியாளர்:** சுங்கச்சாவடியில் ஊழல் நடந்திருப்பதாக சொல்லி இருக்கிறார்களே?

**பாலச்சந்தர் ஐ.ஏ.எஸ்.(ஓய்வு)** : ஏழு சுங்கச் சாவடியில் மட்டும் தான் அவர்கள் பார்த்து இருக்கிறார்கள். அதிலேயே 154 கோடி ரூபாய். அப்படியென்றால் இந்தியா முழுவதும் உள்ள சுங்கச்சாவடிகளில் எத்தனை கோடி. எல்லோருக்குமே தெரியும், சுங்கச்சாவடி முதலில் எதற்காக வந்தது?

**நெறியாளர்:** சுங்கச்சாவடியில் ஊழல் எப்படி நடக்கும் என்பதை தமிழ்நாடு முதலமைச்சர் தெளிவுபடுத்த வேண்டும் என்று தமிழ்நாடு பா.ஜ.க. கேட்கிறதே?

**பாலச்சந்தர் ஐ.ஏ.எஸ்.(ஓய்வு):** சுங்கச்சாவடியில் இத்தனை வருடங்களாக வசூல் செய்ய விட்டதே ஊழல்தான். மிகப் பெரிய ஊழல், சுங்கச்சாவடியின் குறிக்கோள் என்ன வென்றால், அவர்கள் காஸ்ட், ரீபேமெண்ட்க்காக, ரெக்கவரிக்காக கொண்டுவரப்பட்டது அந்த சுங்கச்சாவடி ஸ்கீம். எத்தனை வருடங்களுக்கு வசூல் செய்துக்கிட்டு இருக்கிறார்கள். ஏன் அதனை கேள்வி கேட்க மாட்டேன் என்கிறார்கள். இது நிச்சயமாக மிகப் பெரிய ஊழல். இதில் சந்தேகமே கிடையாது. அண்ணாமலை அவர்கள் மிகவும் அதிகமாக படிக்க வேண்டியவர் என்று நான் நினைக்கிறேன். இதற்கு மேல் நான் சொல்வதற்கு ஒன்றுமில்லை. ஒரே டெலிபோன் நெம்பரில் இருந்து ஏழரை லட்சம் பேருக்கு எப்படி போனது, இப்போது எல்லோரும் 18.5 ரூபாய் கோடியில் இருந்து 250 கோடி ரூபாய் என்று பேசினால், இவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் 250 கோடி ரூபாய் என்று சொன்னது எல்லாம் தவறு, 200 கோடி ரூபாய்தான், அதனையும் நாங்கள் குறைத்து 150 கோடி ரூபாய்க்கு கொண்டு வந்துட்டோம் என்று சொல்கிறார்கள். இப்படி ஒரு பதில் வந்திருக்கு. எதனால் முதலில் 18.5 கோடி என்று வைத்தீர்கள். ஏன், அதனை கம்ப்ளீட்டாக ஜி.பே.யாக மாற்றினீர்கள், அதில் சரியான எஸ்டிமேட் நீங்கள் போட்டீர்களா? சரியான ஒப்புதல் வாங்கினீர்களா என்பது முக்கியமான கேள்வி. வாங்க வேண்டிய இடத்தில் ஒப்புதல் வாங்கினீர்களா. இவைகள் தான் முக்கியமான கேள்விகள். பல சமயங்களில் வந்து அதானியின் ஷேர் விலை குறைந்துவிட்டது என்று எல்லோரும் பேசினார்கள். அந்த கம்பெனி நல்ல இலாபத்தில் ஓடக்கூடிய கம்பெனி, இன்றைக்கு மார்க்கெட்டில் ஷேர் விலை குறைந்தால் நாளை கூடி விடும். இன்றைக்கு பார்த்தோம் எல்லாமே கூடி விட்டது. கேட்க வேண்டிய முறையான கேள்வி, பணம் எங்கே இருந்து வந்தது? அதனை விட்டு விட்டார்கள். அதே மாதிரி இன்றைக்கு கேட்க வேண்டியது என்ன வென்றால், நீங்கள் ஒழுங்கான முறையான ஒப்புதலோடு இதனை ஐ வே வில் மாற்றினீங்களா, அப்படி மாற்றும் போது உங்களுடைய எஸ்டிமேட் வந்து கரைக்ட்டா இருந்ததா. இந்த இரண்டு கேள்வியையும் கேட்டு இருக்கிறார்கள்.

**நெறியாளர்:** ஆயூஷ்மான் பாரத் திட்டத்திலும் ஒரே எண்ணை வைத்து 7.5 லட்சம் பயனாளிகள் இணைப்பு செய்தது. இதில் குறிப்பிடப்பட்டு இருக்கு. ஆனால், அந்தப் பயனாளிகளை தேர்ந்தெடுக்கும் பொறுப்பு மாநில அரசுகளிடம்தான் இருக்கு அப்படி என்றால் இந்தத் தவறு நடந்து இருந்தால் மாநில அரசுகளுக்குத்தான் அதிக பொறுப்பு இருக்கும். அப்படி இருக்கும் போது ஒன்றிய அரசினை நோக்கி நீங்கள் எப்படி சொல்ல முடியும் என்ற கேள்வியும் வந்திருக்கிறதே?

**பாலசந்தர் ஐ.ஏ.எஸ்.(ஓய்வு)** : மாநில அரசுகள் வந்ததே ஆக்ட் ஆஸ்தி ஏஜென்ஸி ஆப் தி யூனியன் கவர்ன்மெண்ட், பார் சம் ஸ்கீம். சென்ட்ரலி ஸ்பான்சர்ட் ஸ்கீம் என்று சொல்வார்கள், சென்ட்ரல் ஸ்கீம் என்று சொல்வார்கள். ஸ்டேட் ஸ்பாண்சர்ட் ஸ்கீம் என்று சொல்வார்கள். இந்த சென்ட்ரலி ஸ்பாண்ட்ஸ்டு ஸ்கீமில் வந்து மாநில அரசுகளுக்கும் ஒரு பங்கு, அதாவது ஒரு பொறுப்பு இருக்கு, அந்தப் பொறுப்பில் இருந்து அவர்கள் தப்பிக்க முடியாது. இப்போது ஏழரை இலட்சம் அக்கவுண்ட் வந்து ஒரே ஒரு டெலிபோன் நம்பரில் இருந்தது என்றால் அது எந்த மாநில அரசு என்று சரியாகத் தெரியவில்லை. இது இந்தியா முழுவதுமாக இருந்தால் ஒரு மாநில அரசு மட்டும் பிளான் செய்திருக்க முடியாது. நிச்சயமாக இது விசாரிக்கப்பட வேண்டியது. மாநில அரசுகளுக்கு பொறுப்பே இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால் இது எப்படி நடந்தது? என்று விசாரிக்கப்பட வேண்டும். ஆனால்,இது மிகப்பெரிய ஒழுங்கீனம் என்பதில் சந்தேகமே கிடையாது.

சி.ஏ.ஜி. முதலில் அறிக்கை தயார் செய்வார்கள். நான் அரசு அதிகாரியாக இருந்திருக்கேன். சி.ஏ.ஜி. முதலில் அறிக்கை தயார் செய்து எங்களிடம் தருவார்கள். இதில் எல்லாம் எங்களுக்கு சந்தேகம் இருக்கிறது என்று. அதற்கு சரியான பதில் சொல்லிட்டோம் என்றால் அதனை எல்லாம் நீக்கி விடுவார்கள். நாங்கள் சரியான பதில் சொல்ல முடியாததற்கு மட்டும் தான் அவர்களின் ரிப்போர்ட்டில் இடம் பெறும். அப்படி என்றால் கொடுத்த விளக்கங்களும் சரியாக இல்லை என்று தான் அர்த்தம். அதனால் தான் இவைகள் எல்லாம் வெளியே வந்திருக்கிறது.

இவ்வாறு பாலசந்தர் ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) பேட்டியளித்தார்.

---

### இந்திய பொருளாதாரம் குறித்து கொஞ்சம் கூட கூசாமல் பொய் பேசும் மோடி!

## மக்களை பன்னாட்டு நிறுவனங்களின் சந்தையாகவே கருதுகிறார்!

### “தீக்கதிர்” நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

*சென்னை, ஆக.30-*


*ஒன்றிய அரசின் கொள்கைகளால் கடந்த ஐந்தாண்டு காலத்தில் வறுமையிலிருந்து 13.50 கோடி மக்கள் மீட்கப்பட்டுள்ளதாக இந்திய பொருளதாரம் குறித்து பேசும் மோடி மக்களை பன்னாட்டு நிறுவனங்களின் சந்தையாகவே கருதுகிறார் என “தீக்கதிர்” நாளேடு 29.08.2023 தேதியிட்ட இதழில் “இவரது பொய்க்கு மட்டுமே வறுமை இல்லை” என்ற தலைப்பில் தலையங்கம் வெளியிட்டுள்ளது. அது வருமாறு:*

*ஒன்றிய அரசின் கொள்கைகளால் கடந்த ஐந்தாண்டு காலத்தில் வறுமையிலிருந்து 13.50 கோடி மக்கள் மீட்கப்பட்டுள்ள தாக பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார். ஜி20 நாடுகளின் வர்த்தக அமைப்பான ‘பிசினஸ் 20’ உச்சி மாநாட்டில் அவர் இவ்வாறு பேசியுள்ளார்.*

*ஆனால் இந்தியப் பொருளாதாரம் குறித்த தரவுகள் பிரதமரின் கூற்றை மறுப்பதாக உள்ளன. ஏழைகளுக்கு ஆதரவான கொள்கைகளை தமது அரசு கடைப்பிடிப்பதால் வறுமை நிலையிலிருந்து மக்கள் மீட்கப்பட்டு நடுத்தர வர்க்கத்தினராக உயர்ந்துள்ளதாக அவர் கொஞ்சம் கூட கூசாமல் கூறியுள்ளார்.*

*மோடி ஆட்சிக்கு வந்தபிறகு இந்தியாவில் வறுமை மற்றும் சமத்துவமின்மை அதிகரித்துள் ளதாக தேசிய மாதிரி கணக்கெடுப்பு கூறியுள்ளது. 2011-12இல் ரூ.1501ஆக இருந்த தனிநபர் நுகர் வோர் செலவினம் 2017-18இல் ரூ.1446ஆக குறைந் தது. கொரோனா காலகட்டத்தில் மோடி அரசின் தவறான அணுகுமுறையால் புலம் பெயர் தொழிலாளர்கள் இந்தியாவின் குறுக்கும்நெடுக்குமாகநடந்து சென்ற காட்சியை எளிதில் மறந்துவிட முடியாது.*

*பணமதிப்பிழப்பு, ஜிஎஸ்டி வரி ஆகியவற் றால் நொறுங்கிப் போன இந்திய மக்களின் வாழ்க்கை கொரோனா முடக்கக் காலத்தில் மேலும் மோசமானது. அதிலிருந்து இந்திய மக்கள் மீளமுடியவில்லை. இந்தநிலையில் 13.50 கோடி மக்களை வறுமையிலிருந்து மீட்டுவிட்ட தாக மோடி*



தீக்கதிர்
2023 ஆகஸ்ட் 29 செவ்வாய்க்கிழமை
இவரது பொய்க்கு மட்டுமே வறுமை இல்லை
ஒன்றிய அரசின் கொள்கைகளால் கடந்த ஐந்தாண்டு காலத்தில் வறுமையிலிருந்து 13.50 கோடி மக்கள் மீட்கப்பட்டுள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார். ஜி20 நாடுகளின் வர்த்தக அமைப்பான ‘பிசினஸ் 20’ உச்சி மாநாட்டில் அவர் இவ்வாறு பேசியுள்ளார்.
ஆனால் இந்தியப் பொருளாதாரம் குறித்த தரவுகள் பிரதமரின் கூற்றை மறுப்பதாக உள்ளன. ஏழைகளுக்கு ஆதரவான கொள்கைகளை தமது அரசு கடைப்பிடிப்பதால் வறுமை நிலையிலிருந்து மக்கள் மீட்கப்பட்டு நடுத்தர வர்க்கத்தினராக உயர்ந்துள்ளதாக அவர் கொஞ்சம் கூட கூசாமல் கூறியுள்ளார்.
மோடி ஆட்சிக்கு வந்தபிறகு இந்தியாவில் வறுமை மற்றும் சமத்துவமின்மை அதிகரித்துள்

*கூறுவதில் அர்த்தமில்லை.*

*கொரோனா காலத்தில் 150க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு தடுப்பு மருந்தை இந்தியா அனுப்பி யது என்றும் பிரதமர் கூறியுள்ளார். ஆனால் தடுப்பூசி தயாரிப்பில் பொதுத்துறை நிறுவனங்க ளை புறக்கணித்து இரு தனியார் நிறுவனங்களுக்கே அனுமதி தந்ததோடு உள்நாட்டு மக்களுக்கே இலவசமாக தடுப்பூசி வழங்க மோடி அரசு முதலில் மறுத்ததை மறந்துவிட முடியாது.*

*சந்திரயான் திட்டத்தில் தனியார் துறை பங்களிப்பும் இருந்ததாகக் கூறி ஜி20 நாடுகளின் பிரதிநிதிகளை குஷிப்படுத்த முயன்றுள்ளார் பிரதமர். விண்வெளித் துறையில் இதுவரை இந்தியா நிகழ்த்திய சாதனைகள் அனைத்திற்கும் இஸ்ரோ என்ற அரசு நிறுவனமே காரண மாகும். ஆனால் விண்வெளித்துறையிலும் தனியார் முதலீட்டை ஊக்குவிப்பதன் மூலம் எதிர்காலத்தில் அந்தத் துறையையும் கார்ப்பரேட் முத லாளிகளிடம்ஒப்படைத்துநாட்டை நட்டாற்றில் விட பா.ஜ.க. அரசு முடிவு செய்துவிட்டது என்ப தையே பிரதமரின் பேச்சு உணர்த்துகிறது.*

*அடுத்த 5 7 ஆண்டுகளில் நடுத்தர மக்கள் தான் இந்தியாவில் அதிகமாக இருப்பார்கள் என்று கூறுவது உண்மையா என்பது ஒரு புற மிருக்க, மக்களை பன்னாட்டு நிறுவனங்களின் சந்தையாகவே பிரதமர் கருதுகிறார் என்பதே அவரது பேச்சின் உட்பொருளாகும்.*

*அவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.*



இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் நேற்று (29.08.2023 ) சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், தனுஷ்கோடியில் சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் சுற்றுலாத்துறை ஆணையர் சந்தீப் நந்தூரி, மாவட்ட ஆட்சித்தலைவர் பா.விஷ்ணு சந்திரன், இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் ஆகியோர் உள்ளனர்.



மதுரை தெற்கு மாவட்டம் திருமங்கலத்தில் வரும் 20ந்தேதி கழக இளைஞர் அணி செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொற்கிழி வழங்கும் நிக்ழ்ச்சியை சிறப்பாக நடத்துவது, சேலத்தில் நடைபெறவுள்ள இளைஞர் அணி மாநில மாநாட்டில் 50ஆயிரம் பேர் பங்கேற்பது உள்ளிட்ட தீர்மானங்களை விளக்கி மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் மற்றும் திரளான கழகத்தினர் உள்ளனர்.

### உழைப்பை மந்திரமாக ஏற்றுக் கொண்டு ஆட்சிக்கு வந்த முதல்வர்!

# இந்தியாவின் 2வது பொருளாதார மாநிலமாக உயர்ந்த தமிழ்நாடு!

### 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஆக. 30 - தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக உழைப்பதை மந்திரமாக ஏற்றுக்கொண்ட முதலமைச்சர் 27 மாதங்களில் இந்தியாவின் 2 வது பொருளாதார மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கியுள்ளார் என்று 'இரண்டாண்டில் 2 ம் இடம்' என்ற தலைப்பில் 'தினகரன்' நாளேடு தலையங்கம் தீட்டியுள்ளது.

அது வருமாறு:-

மாநிலங்கள், ஒரு தேசிய தலைநகரப் பகுதி உட்பட 8 யூனியன் பிரதேசங்களை உள்ளடக்கியது இந்தியா. 140 கோடி மக்கள் தொகையைக் கொண்ட இந்தியாவில் தமிழ்நாடு 2வது பெரிய பொருளாதார மாநிலமாக உருவெடுத்துள்ளது.

24 மணி நேரமும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக உழைப்பதை மந்திரமாக ஏற்றுக் கொண்டு 2021ல் ஆட்சியை பிடித்தார் மு.க. ஸ்டாலின். அவர் முதல்வராக பொறுப்பேற்றுக் கொண்ட 27 மாதங்களில் தமிழ்நாட்டை உன்னதமையாகவே தலை நிமிர வைத்துள்ளார். நாட்டின் 2வது பெரிய பொருளாதார மாநிலம் என்ற இலக்கை தமிழ்நாடு எட்டியிருக்கிறது என்றால் அதற்கு காரணம் முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசின் அயராத உழைப்பே யாகும்.

ஏழை, எளிய மக்களின் நலன் கருதி அரசு பேருந்துகளில் மகளிர்களுக்கு இலவச பயணம், அனைத்து அரசுப் பள்ளிகளிலும் மாணவ, மாணவிகளுக்கு காலை உணவு திட்டம், நான் முதல்வன், இன்னுயிர் காப்போம், கல்லூரி கனவு, புதுமைப்




பெண் திட்டம் என தனது தந்தையும், முன்னாள் முதல்வருமான கலைஞர் பாணியில் கடந்த இரண்டரை கால ஆட்சியில் புதுப்புது திட்டங்களை செயல்படுத்தியுள்ளார் மு.க. ஸ்டாலின். ஒவ்வொரு நாட்டிற்கும், மாநிலத்திற்கும் ஜிடிபி என்ற மொத்த உள்நாட்டு உற்பத்தி தான் அடிப்படை. அதை வைத்து தான் 'பெர் கேபிட்டா' எனப்படும் தனி நபர் வருமானம் கணக்கிடப்படுகிறது.

இன்றைய நிலையில் தமிழ்நாட்டின் உற்பத்தி மதிப்பு ரூ.23 லட்சத்து 64 ஆயிரத்து 514 கோடியாக உயர்ந்திருக்கிறது. இதன் மூலம் நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 8.7 சதவீதமாக இருக்கிறது. கடந்த ஆண்டு தமிழ்நாட்டில் தனி நபர் வருமானம் ரூ.1 லட்சத்து 54 ஆயிரத்து 557 ஆகும். ஆனால் இந்த ஆண்டு தனி நபர் வருமானம் ரூ.ஒரு லட்சத்து 66 ஆயிரத்து 727 ஆக உயர்ந்திருக்கிறது. அதே நேரத்தில் இந்திய நாட்டின் தனி நபர் வருமானம் நடப்பு ஆண்டில் லட்சத்திற்கு கீழ் தான். அதாவது 98 ஆயிரத்து 374 ஆகும். கோவிட் தொற்று காரணமாக உலகமே பொருளாதார சரிவை சந்தித்தது. இந்த பொருளாதார சரிவில் இருந்து இன்னும் பல நாடுகள் மீளவில்லை.

குட்டி நாடான இலங்கையில் கூட பொருளாதார வீழ்ச்சி ஆட்சியாளர்களை புரட்டிப் போட்டது. ஆனால், 2021ல் கோவிட் தொற்று நேரத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அந்த தொற்றில் இருந்து மாநில மக்களை காப்பதை முதல் கடமையாக எடுத்துக் கொண்டார். ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே தனது அமைச்சரவை சகாக்களை மாவட்டங்களுக்கு முடுக்கி விட்டு கோவிட் தொற்றை முழுமையாக கட்டுக்குள் கொண்டு வந்தார். அடுத்து தொழில் தொடங்க உகந்த மாநிலம் தமிழ்நாடு என்பதை நிரூபிக்கும் வகையில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி தொழில் நிறுவனங்களின் கவனத்தை ஈர்த்தார். தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம், மின்னணு ஏற்றுமதியில் முன்னணி மாநிலம் என பொருளாதாரத்தை மீட்டெடுத்து நாட்டிலேயே 2வது மாநிலம் என்ற பெயர் பெறும் அளவிற்கு தலை நிமிரச் செய்திருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின் என்றால் அது மிகையில்லை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

### சேலம் மாநாட்டில் 50 ஆயிரம் பேர் சீருடை அணிந்து பங்கேற்பு!

# 3 ஆயிரம் பேருக்கு பொற்கிழி! அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

### சேடப்பட்டி மு.மணிமாறன் தலைமையில் நடந்த தெற்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரை!

மதுரை, ஆக. 30 - மதுரை தெற்கு மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் திருமங்கலத்தில் மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு. மணி மாறன் தலைமையில் நடை பெற்றதில், மாவட்ட பொறுப்பாளரும் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சருமான பி.மூர்த்தி கீழ்க் கண்டவாறு சிறப்புரை யாற்றினார். அதன் விபரம்,

கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இந்தியாவிற்கு எடுத்துக்காட்டாக எல்லோரும் வியக்கும் வகையில் நல்லாட்சி நடத்தி வருகின்றார் என்பது நாடே அறியும். அவ்வழியில் பின்பற்றும் நம் கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நாள்தோறும் பல்வேறு இடங்களுக்கு சென்று மக்கள் பணியையும், கழக பணியையும் ஆற்றுவதில் முன் உதாரணமாக திகழ்ந்து வருகின்றார்.

வரும் 20ஆம் தேதி திருமங்கலத்தில் மதுரை தெற்கு மாவட்ட திமுக சார்பில் நடைபெற உள்ள மூத்த முன்னோடிகள் 3 ஆயிரம் பேருக்கு பொற்கிழி வழங்கும் விழா மற்றும் பல்லாயிரக்கணக்கான பூத் கமிட்டி உறுப்பினர், கழகத்தினருக்கு நிதி உதவி வழங்கி கௌரவிக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளார். அதுசமயம் அவருக்கு எழுச்சிமிகு வரவேற்பு கொடுத்திட வேண்டும், மேலும் வரலாற்று சிறப்பு மிக்க மாநில இளைஞரணி இரண்டாவது மாநில மாநாடு சேலத்தில் டிசம்பர் 17ம் தேதி நடைபெற உள்ளது, அதில் இளைஞர் அணியினர் சீருடை அணிந்து மிடுக்கான தோற்றத்துடன் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அணிவகுப்பதற்கான ஏற்பாடு கள் செய்யப்பட்டுள்ளது. மேலும் இதில் இளைஞர் அணி தம்பிமார்களையும் சேர்த்து சுமார் 50ஆயிரம் பேர் அணி அணியாய் புறப்பட்டு பங்கேற்க வேண்டும்.

அ.தி.மு.க.வினர் நடத்திய மாநாட்டை விட பல மடங்கு சிறப்பு சேர்க்கும் வகையில் இந்த இளைஞர் அணி மாநில மாநாடு இந்தியாவில் சாதனை படைக்கும் மாநாடாக அமையும். பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அரசுதான் நம் அரசு, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெண்களுக்கு சுய உதவி குழுக்கள் கடன்களை தள்ளுபடி செய்தார், மேலும் 900 கோடி ரூபாய் மதுரை மாவட்ட மகளிர் சுய உதவி குழுக்களுக்கு வழங்கியுள்ளார், இதில் 450 கோடி ரூபாய் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது, மீதம் 450 கோடி ரூபாய் உள்ளது. இதனை மகளிர் சுயஉதவி குழுக்கள் பல்வேறு தொழில் கள் ஆரம்பித்து புரட்சி பெண்களாக வரவேண்டும் அவர்கள் கடனுதவி பெறுவதற்கான ஏற்பாடுகளை அனைத்து அதிகாரிகளும் செய்து தர வேண்டும்.

இந்தியா கூட்டணி மாபெரும் சக்தியாக விளங்குகின்றது தமிழ்நாட்டில் வரும் நாடாளுமன்ற தேர்தலில் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் 40 தொகுதிகளிலும் தி.மு.க. தலைமையிலான கூட்டணி அமோக வெற்றி பெறும் என்பதில் மாற்றமில்லை என்று மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பேசினார் மதுரை தெற்கு மாவட்டச் செயல்வீரர்கள் கூட்டத்திற்கு தலைமை ஏற்று மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணி மாறன் பேசியதாவது:

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறும் அரசு மக்கள் நலத் திட்டங்கள் வழங்குவதில் இந்தியாவிற்கே முன் உதாரணமாக உள்ளது. இந்தியா கூட்டணி இந்தியாவில் வலிமையான இயக்கமாக உள்ளது. அரசு பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவு திட்டம், விவசாயி களின் முன்னேற் றத்திற்கான திட்டம் என பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயலாற்றி வருகின் றார், கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மக்களையும் கழகத்தினரையும் நேரில் சந்தித்து குறை கேட்டு நிறைவு செய்து வருகின்றார், மூத்த கழக முன்னோடிகளையும் கழக உடன்பிறப்புகளையும் சந்தித்து பொற்கிழி நிதி உதவி என வழங்கி கவுரவித்து பாராட்டி வருகின்றார். நாம் இதுவரையில் நடத்திய கூட்டங்கள் எல்லாம் அண்ணன் அமைச்சர் பி.மூர்த்தி ஆலோசனையின் படி மாநாடு போல் நடத்தியுள்ளோம். எனவே இந்த நிகழ்ச்சியையும் மாநாடு போல் நடத்த எல்லோரும் தயாராக வேண்டும், சேலம் இளைஞர் அணி மாநில மாநாட்டில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்று பெருமை சேர்ப்போம், வரும் நாடாளுமன்ற தேர்தலில் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் அனைத்து இடங்களிலும் வெற்றி பெறுவது உறுதி அதற்கு அனைவரும் அயராது உழைக்க வேண்டும் என்று மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் பேசினார்

இக்கூட்டத்திற்கு கழக நிர்வாகிகள் நாகராஜன், லதா அதியமான், கொம்பாடி தங்கம், ஏர்போர்ட் பாண்டியன், கே.இளமகிழன், செல்லம்பட்டி முத்துராமன், முத்துராமலிங்கம், கொடி சந்திரசேகர், பாசபிரபு, இளைஞர் அணி விமல், நகர்மன்ற தலைவர் ரம்யா முத்துக்குமார், துணைத் தலைவர் ஆதவன் அதியமான் உள்ளிட்ட கழகத்தினர் முன்னிலை வகித்தனர், மற்றும் இக்கூட்டத்தில் மதுரை தெற்கு மாவட்டத் திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழகத்தினர் என பெரும் திரளானோர் பங்கேற்றனர்.

# நடிகர் வடிவேலுவின் தம்பி ஜெகதீஸ்வரன் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக. 30 - நடிகர் வடிவேலுவின் தம்பி மறைவையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :

திரைக்கலைஞர் வடிவேலு அவர்களின் தம்பியான ஜெகதீஸ்வரன் (52) அவர்கள் உடல்நலக் குறைவின் காரணமாக உயிரிழந்தார் என்று அறிந்து வருந்துகிறேன்.

உடன்பிறந்த உற்ற துணையான தன் தம்பியை இழந்து வாடும் வடிவேலு அவர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் இந்நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அச்செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

**முதலமைச்சர் அவர்கள் நடிகர் வடிவேலுவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆறுதல்**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நடிகர் வடிவேலுவை தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு அவரது தம்பி மறைவிற்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து ஆறுதல் கூறினார்.

# விருதுநகர் தெற்கு / வடக்கு மாவட்ட தி.மு.க அவசர செயற்குழு கூட்டம்!

### மாவட்டச் செயலாளர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் - தங்கம் தென்னரசு அறிவிப்பு!





விருதுநகர் தெற்கு / வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு கூட்டம் இன்று (30.08.2023 - புதன்கிழமை) மாலை 4.30 மணியளவில், விருதுநகர், கந்தசாமி திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர்கள் வி.தங்கராஜ், எஸ். செல்வமணி தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள்/நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொருள் : கழக இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டம் மற்றும் பொற்கிழி வழங்குதல் சம்பந்தமாக.

**அமைச்சர் - கே.கே.எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன்**
செயலாளர்
விருதுநகர் தெற்கு மாவட்ட தி,மு,க.

**அமைச்சர் - தங்கம் தென்னரசு**
செயலாளர்
விருதுநகர் வடக்கு மாவட்ட தி,மு,க.

# இந்தியாவை மீட்டெடுக்க வேண்டிய போர்க்களம்!

என் இனிய தமிழ் சொந்தங்களே!

அண்டிப் பிழைப்பவன் அதிகாரத்துக்கு வந்து விட்டால் நொண்டி குதிரை கூட பந்தயத்தில் ஜெயித்து விடும்! இந்திய ஜனநாயக கோட்டையிலே ஓட்டைகளை உருவாக்கி அதன் வழியாக ஆரிய வாரிசுகள் பலர் அரியணை ஏறியதும் அதன் பலனாக பண மேடுகள் பல மலைகளாக ஏற்றம் பெற்றதும் மதவாதிகள் குறுநில மன்னர்களாக மாறி ஆங்காங்கே குழப்பங்களை விளைவித்ததும் சோசியலிச இந்தியாவை கார்ப்பரேட்டுகளின் இந்தியாவாக மாற்றியதும் புதுப்புது சட்டங்கள் மூலம் விவசாயிகளை, மாணவர்களை, தொழிலாளர்களை, இஸ்லாமியரை, கிறிஸ்தவரை, மத நம்பிக்கையற்றவர்களை, பட்டியலினத்தவரை, பாமரரை, படித்தவரை, வேலையற்றோரை, விவரம் புரியாத வரை, அடிமைப்படுத்தி ஏக இந்தியா என்ற பெயரில் சன்மார்க்க அரசியல்வாதிகளின் ஏதேச்சதிகாரத்தின் அதிகார எல்லைக்குள் அடக்கி வைத்த ஆன்மீக ஆசான்களின் முழு ஆசைகளும் நிறைவேறாத காரணத்தினால் 2024 இல் தேர்தல் களம் கண்டு மீண்டும் பதவியை அடைய முயற்சியில் இறங்கிவிட்டனர்!

இந்த முடி மன்னர்களின் அடிமைத் தளையினை அறுத்து விடுதலை முரசொலித்து இந்திய குடிமக்கள் ஒவ்வொருவரும் சுதந்திரக் காற்றை மீண்டும் சுவாசிக்க வேண்டுமானால் தெற்கே பிரகாசிக்கும் உதயசூரியன் ஒளியிலே இந்திய அணி முத்துவேலர் கருணாநிதி ஸ்டாலின் சொல்லும் திராவிட அரசியல் என்ற பிரமாஸ்த்திரத்தை கையில் எடுத்து 2024 இல் நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் வீர நடை போட வேண்டும்!

அடுத்து வரப்போவது வெறும் தேர்தல் களம் அல்ல! வெள்ளையனை விட விஷமத்தனம் நிரம்பிய கொடும் மதவெறி பிடித்த குலக்கல்வி திட்டத்தை ஆதரிக்கும் ஜனநாயகத்தை குலைக்கும் கார்ப்பரேட்டுகளின் கைக்கூலிகளாக இயங்கும் மாநில சுதந்திரங்களை பறிக்கும் இதயமே அற்ற இரக்கமே இல்லாத சன்மார்க்க அரசியல் என ஏமாற்றி தனிமனித சுதந்திரத்தை பறித்திட்ட பசுத்தோல் போர்த்திய சைவப் புலிகளிடமிருந்து பாரதத்தை மீட்டெடுக்க வேண்டிய சுதந்திரப் போர்க்களம்!

இங்கே துப்பாக்கிகளும் வான் படைகளும்...பிறபல ஆயுதங்களும் தேவையே இல்லை.பயனற்ற வார்த்தைகளும் தேவையில்லை!

இந்திய மக்கள் கடந்த 10 ஆண்டுகள் பட்ட துன்பங்களையும் துயரங்களையும் பதாதைகைகளாக எழுதி ஒவ்வொரு வீட்டு வாசலிலும் வையுங்கள்!

தெருமுனைகளில் ZERO BALANCE வங்கி கணக்குகளால் ஏழைகள் ஏமாந்த கதையை எழுதி வையுங்கள்!

நகரெங்கும் நீட் தேர்வினால் தூக்கு மாட்டிக்கொண்ட மாணவ, மாணவியரின் படங்களை ஒட்டுங்கள்.

பிரதமர் பெயரிலே ஆரம்பிக்கப்பட்ட ஏழைகளுக்கான வீடு கட்டும் திட்டம்...சேமிப்பு திட்டம் வேலை வழங்கும் திட்டம் 15 லட்சங்கள் போடும் திட்டம் அனைத்தும் அடைந்த படுதோல்விகளை பட்டியலிட்டு போஸ்டர்களை ஒட்டுங்கள்!

ஏழை என் வீட்டிலே உணவில்லை. பிறந்த குழந்தைக்கு பாலூட்ட தாயின் மார்பிலே பால் சுரக்கவில்லை. இந்த நிலையிலே பல ஆயிரம் கோடிகளில் புதிய பாராளுமன்ற கட்டிடம்....அதிலே ஒரு செங்கோல் - இவை தேவைதானா என கேளுங்கள்!

காஷ்மீர் நமது கைக்குள்ளே எனச் சொல்லுகின்ற அவர்களிடம் சீனாவிடம் பறிகொடுத்த பாரதத் தாயின் நிலப்பரப்பின் அளவு எவ்வளவு? அது ஏன் மீட்கப்படவில்லை என்று கேளுங்கள்!

பிரதமரின் பத்தாண்டு பயணச் செலவுகள் - நவீன ஆடைகளின் செலவு எவ்வளவு என்று விசாரியுங்கள்!

அவர்கள் மாநிலங்களுக்கு அனுப்பிய கவர்னர்களின் வரம்பு மீறிய செயல்களால் தடைப்பட்ட மாநில அரசுகளின் நற்செயல்களை பட்டியலிட்டு மக்களிடம் எடுத்துச் சொல்லுங்கள்!

இன்னும் சொல்லுவதற்கு ஏராளம் உண்டு!

தேசப்பிதா அண்ணல் காந்திஜி காண விரும்பிய இந்தியாவை 10 ஆண்டுகளாக நேர் எதிர் திசையில் நாட்டை நடத்திச் சென்று நாசக்குழிக்குள் தள்ளிவிட்ட இவர்களை உங்கள் வாக்குகள் என்ற பொன்னான ஜனநாயக ஆயுதம் கொண்டு விரட்டி அடியுங்கள்.

நீங்கள் போடுகின்ற ஓட்டிலே இனிமேல் இவர்கள் டெல்லி பக்கமே தலைவைத்து படுக்கக் கூடாது என்ற நிலை ஏற்பட வேண்டும்! முடிந்தால் இவர்களை இமயத்தின் எல்லை பக்கமாக விரட்டிய அடியுங்கள்!

இந்த மடாதிபதிகளுக்கு அந்த இடம் தான் ஏற்ற இடம் என்பதால் இவர்களை விரட்டுங்கள் உங்கள் ஒருவிரல் புரட்சி மூலம்!

வளர்க திராவிட அரசியல்! வெல்க இந்திய சுதந்திரம்!



**வி.செ.குகநாதன்**
திரைப்பட
இயக்குநர்

# புதுக்கோட்டையில் காலை உணவுத் திட்டம் துவக்கம்!

புதுக்கோட்டை, ஆக. 30 – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 25.8.2023 அன்று இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுப்படுத்தி, 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் அரசுப் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைகாணொலிக்காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், திருமயம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்து, மாணவ, மாணவிகளுடன் அமர்ந்து உணவருந்தினார்.

இதில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் தி.முருகேசன், ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மின்துறை**
கலைஞர் 100 1924 - 2023

த.தெ.நு.மை.ந.க.எண்.சி1 /2432/2023

**ஒப்பந்தப்புள்ளிகள்**

**கீழ்கண்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் மேற்பார்வை பொறியாளர், மின்துறை பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களால் கோரப்படுகிறது.**

**Purchasing of toners for canon model printers available at various locations for Greater Chennai Corporation for a period of one year**- க்கான ஒப்பம்.

| பணியின் மதிப்புத் தொகை | ஒப்ப முன் வைப்புத் தொகை |
|---|---|
| 1,09,82,354/- | 1,09,824/- |

ஒப்ப படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யலாம்.
நிறைவு செய்யப்பட்ட ஒப்பப்புள்ளிகள் **சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் 21.09.2023 அன்று பிற்பகல் 3.00 மணி** ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **22.09.2023 அன்று பிற்பகல் 3.15 மணி**

செ.ம.தொ.இ / 4780 / ஒப்பந்தப்புள்ளி / 2023 **கண்காணிப்பு பொறியாளர் / மின்சாரம்**

# 2 ஆண்டுகளாக - தமிழ்நாடு மாநில பொருளாதாரம் வளர்கிறது! மாநில உற்பத்தி மதிப்பு ஒரு பார்வை!

தமிழ்நாட்டின் உள்நாட்டு உற்பத்தி மதிப்பு (GSDP) குறித்த கணிப்பை தமிழ்நாடு அரசின் பொருளியியல் மற்றும் புள்ளியியல் துறை தயாரித்துள்ளது. அதன் சிறப்பு அம்சங்கள் :

ஒவ்வொரு ஆண்டும் மாநிலங்களின் உற்பத்தி மதிப்பு குறித்த புள்ளி

1. ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்க அமைச்சகம் ஒவ்வொரு ஆண்டும் மாநிலங்களின் உற்பத்தி மதிப்பு குறித்த புள்ளி விவரங்களை வெளியிட்டு வருகிறது, அந்த புள்ளி விவரங்களை எவ்வாறு தொகுத்து ஒரு மாநிலத்தின் உற்பத்தி மதிப்பைக் கணக்கிட வேண்டும் என்ற முறையையும் அவ்வமைச்சகம் வகுத்தளித்துள்ளது.

இந்த புள்ளி விவரங்களைக் கொண்டு வகுத்தளிக்கப்பட்ட நடைமுறையை பின்பற்றி சென்ற இரண்டு ஆண்டுகளுக்கான உற்பத்தி மதிப்பை தமிழ்நாடு அரசின் பொருளியியல் மற்றும் புள்ளியியல் துறை கணித்துள்ளது.

இந்திய ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்க அமைச்சகம் உருவாக்கி அளித்துள்ள முறைகளைப் பின்பற்றி நமது மாநிலத்தில் ஒரு நிதியாண்டு காலத்தில் நடைபெற்ற உற்பத்திகளின் மதிப்பை நடப்பு விலையின் அடிப்படையிலும் நிலைத்த விலையின் அடிப்படையிலும் புள்ளியியல் துறை கணக்கிடுகிறது.

இத்தகைய கணிப்பு முறையினால் பெறப்படும் மதிப்பினை பிற மாநில விவரங்களோடோ அல்லது முந்தைய ஆண்டுகளின் மதிப்பீடுகளோடோ

ஒப்பிட்டு நமது மாநிலத்தின் வளர்ச்சிப் போக்கினை நாம் அறிந்து கொள்ளலாம்.

1. நமது மாநிலத்தின் உற்பத்தி மதிப்பு

| ஆண்டு | நிலைத்த விலை | நடப்பு விலை |
|---|---|---|
| 2021 - 2022 | ரூ. 13,43,287 கோடி | ரூ. 14,53,321 கோடி |
| 2022 - 2023 | ரூ. 20,71,286 கோடி | ரூ. 23,64,514 கோடி |

2021- 2022-ஆம் ஆண்டு நிலைத்த விலை ரூ.13,43,287 கோடி, நடப்பு விலை ரூ.14,53,321 கோடி. 2022 - 2023-ஆம் ஆண்டு நிலைத்த விலை ரூ.20,71.286 கோடி, நடப்பு விலை ரூ.23,64.514 கோடி.

2. ஒன்றிய உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு

| ஆண்டு | நிலைத்த விலை | நடப்பு விலை |
|---|---|---|
| 2021 - 2022 | 9.0 % | 8.8% |
| 2022 - 2023 | 9.1 % | 8.7% |

2021-2022-ஆம் ஆண்டு நிலைத்த விலை 9.0%, நடப்பு விலை 8.8%

2022-2023-ஆம் ஆண்டு நிலைத்த விலை 9.1%, நடப்பு விலை 8.7%

3. 2021-22 ஆம் ஆண்டில் நடப்பு விலையில் தமிழ்நாட்டின் பொருளாதாரம் இந்திய ஒன்றியத்தில் இரண்டாவது பெரிய பொருளாதாரமாகவும் நிலைத்த விலையில் மூன்றாவது பெரிய பொருளாதாரமாகவும் திகழ்கிறது. 2022-23ஆம் ஆண்டில் தமிழ்நாடு எந்த நிலையில் உள்ளது என்பதை அறிய மற்ற மாநிலங்களின் உற்பத்தி மதிப்பீடுகளுக்காக காத்திருக்க வேண்டியுள்ளது.

4. நமது மாநிலப் பொருளாதாரம் 2021-22ஆம் ஆண்டில் நிலைத்த விலையில் 7.92% அளவிலும், 2022-23ஆம் ஆண்டில் 8.19% என்ற அளவிலும் வளர்ச்சி கண்டுள்ளது. நடப்பு விலையில் வளர்ச்சியின் அளவு 15.84% ஆக 2021-22-ஆம் ஆண்டிலும் 14.16% ஆக 2022-23-ஆம் ஆண்டிலும் இருக்கிறது.

5. மாநிலத்தின் வளர்ச்சி விகிதம்

| ஆண்டு | நிலைத்த விலை | நடப்பு விலை |
|---|---|---|
| 2021 - 2022 | 8.19 % | 15.84% |
| 2022 - 2023 | 7.9 % | 14.8% |

2021-2022-ஆம் ஆண்டு நிலைத்த விலை 8.19%, நடப்பு விலை 15.84%

2022-2023ஆம் ஆண்டு நிலைத்த விலை 7.9%, நடப்பு விலை 14.8%

6. ஒன்றியத்தின் வளர்ச்சி விகிதம்

| ஆண்டு | நிலைத்த விலை | நடப்பு விலை |
|---|---|---|
| 2021 - 2022 | 9.05 % | 18.36% |
| 2022 - 2023 | 7.24 % | 16.06% |

2021-2022-ஆம் ஆண்டு நிலைத்த விலை 9.05%, நடப்பு விலை 18.36%

2022-2023ஆம் ஆண்டு நிலைத்த விலை 7.24 %, நடப்பு விலை 16.06%

(கொரோனா பெருந்தொற்று காலத்தில் ஒன்றியத்தின் வளர்ச்சி எதிர்மறையாக குன்றியதால் 2021-22-ஆம் ஆண்டிற்கான வளர்ச்சி கூடுதலாகத் தெரிகிறது).

7. தமிழ்நாட்டில் விலைவாசியின் அளவு இந்திய ஒன்றியத்தை விடக் குறைவாக உள்ளது. பணவீக்க குறியீட்டு எண் மாநில அளவில் 2021-22-ஆம் ஆண்டில் 7.92% ஆகவும் 2022-23-ஆம் ஆண்டில் 5.97% ஆகவும் காணப்பட்ட நிலையில் ஒன்றிய அளவில் இக்குறியீட்டு எண் 9.31 என்றும் 8.82 ஆகவும் உயர்ந்து காணப்பட்டது.

8. பெருந்தொற்று காலத்தில் மாநிலத்தின் வளர்ச்சி குன்றியது. அதற்கு முந்தைய இரண்டு ஆண்டுகளில் (நடப்பு விலையில்) மாநிலத்தின் வளர்ச்சி 2018-19-ல் 7.01% ஆகவும் 2019-20-ல் 3.25% ஆகவும் இருந்தது.

தொற்றுக்கு பிந்தைய இரண்டு ஆண்டுகளில் வளர்ச்சி உயர்ந்து 7.92% ஆகவும் 8.19% ஆகவும் காணப்படுகிறது.

9. தனிநபர் ஆண்டு வருமானம் (நிலைத்த விலையில்)

| | 2021-22 | 2022-23 |
|---|---|---|
| தமிழ்நாடு | ரூ. 1,54,557 | ரூ. 1,66,727 |
| இந்தியா | ரூ. 92,583 | ரூ. 98,374 |
| | (67%) | (69%) |

தமிழ்நாடு - 2021-22- ரூ.1,54,557, 2022-23- ரூ.1.66,727


இந்தியா - 2021-22- ரூ.92,583 (67%), 2022-23- ரூ.98,374 (69%)

10. முதன்மைத் துறையின் (வேளாண்மை மற்றும் அதன் சார்பு துறைகள்) பங்கு மொத்த உற்பத்தியில் 12.18%, 11.73% ஆகவும் உள்ளன. (நடப்பு விலையில்)

11. முதன்மைத்துறையின் கால்நடைத்துறை சிறப்பான வளர்ச்சியை கண்டுள்ளது. இத்துணைத்துறையின் பங்கு 44-45% ஆக உள்ளது.

12. இரண்டாம் துறையின் (உற்பத்தித் துறை) பங்களிப்பு 36.9% ஆக இருந்தது. அடுத்த ஆண்டு உயர்ந்து 2022-23 ல் 37.4% ஆக காணப்படுகிறது.

13. உற்பத்தித்துறையின் வளர்ச்சியும் வேகம் பிடித்துள்ளது. 2021-22 ல் 9.7% என்ற அளவில் வளர்ந்த இத்துறை. 2022-23-ல் 10.4% என்று உயர்ந்துள்ளது.




14. சேவைத்துறையின் பங்கு 2022-23 ல் ரூ. 6,57,363 கோடியாகும். மொத்த உற்பத்தி மதிப்பில் இது 50.9% ஆகும். ஒன்றிய அளவோடு ஒப்பிட்டால் (54%) நமது மாநிலத்தில் சேவைத்துறையின் பங்கு குறைவு. நமது மாநிலத்தின் வளர்ச்சியில் திட்பமான (tangible) துறைகளாகிய முதன்மை மற்றும் இரண்டாம் துறையின் பங்களிப்பு கூடுதலாக இருப்பதும் நமது மாநில வளர்ச்சியை இவ்விரு துறைகளும் உந்தித்தள்ளுவதும் குறிப்பிடத்தக்கவையாகும்.

15. 2011-12 முதல் 2017-18 வரை மாநில பொருளாதார வளர்ச்சி மிகுந்த ஏற்ற இறக்கங்களுடன் காணப்பட்டது. அதன்பின் பெரிய சரிவை சந்தித்தது. தொற்றுக்குப் பிறகு வளர்ச்சி வேகம் பிடித்து கடந்த இரண்டு ஆண்டுகளாக சராசரியாக 8% என்ற அளவில் நமது பொருளாதாரம் வளர்கிறது.

இவ்வாறு தமிழ்நாடு அரசு செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மாணவர்களின் வலிமையான எதிர்காலத்தை கல்விதான் உருவாக்கும்!

## திருப்பத்தூரில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

*சிவகங்கை, ஆக. 30 -*

*சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி கோட்டை இருப்பு, திருக்கோஷ்டியூர் அரசு மேல்நிலைப் பள்ளி, திருப்பத்தூர் நாகப்பா மருதப்பா அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலும் முதல்வரின் விலையில்லா இலவச மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட திட்ட அலுவலர் ராம.சிவராமன் தலைமையில் நடைபெற்றது.*



*இந்த நிகழ்ச்சியில் 482 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டியினை வழங்கி கூட்டுற வுத்துறை அமைச்சர்கேஆர். பெரியகருப் பன் பேசியதாவது . தமிழக முதல்வரின் சார்பில் உங்களுக்கு இந்த மிதிவண்டியினை வழங்க வந்துள்ளேன். மாணவர்கள் தங்களது பெற்றோர்களின் கனவினை நினைவாக்கிடும் வகையில் நன்றாக படித்து பல்வேறு சாதனைகளை படைத்திட வேண்டும். கழக தலைவர் தளபதி அவர்கள் முதல்வராக பதவி ஏற்ற காலத்தில் நிதி நிலைமை மிகவும் மோசமான நிலையில் இருந்தது. அதை சீரமைத்து தற்போது அனைத்து உதவிகளையும் மக்கள் நலத்திட்டங்களை முதல்வர் அவர்கள் நிறைவேற்றி வருகிறார்.*

*இதில் கல்வி, சுகாதாரத்தையும் இரண்டு கண்களாக பாவித்து வருகிறார் . தனியாக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் கல்விக்காக மட்டும் ரூபாய் 47 ஆயிரம் கோடி நிதியினை ஒதுக்கி உள்ளார். இதனால் பள்ளி மாணவர்கள் நன்றாக படித்து தங்களது வாழ்க்கையில் முன்னேற வேண்டும். கல்வி ஒன்று தான் உங்களது வாழ்க்கையில் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கும். மாணவர்கள் படிப்பின் போது தவறான செயல்களில் ஈடுபடக்கூடாது. ஒழுக்கத்துடன் வாழ வேண்டும். மாணவர்களை ஒழுக்கமானவ ராக செதுக்கும் இடம் தான் பள்ளிக்கூடம்.*

*எனவே மாணவர்கள் கல்வியில் மட்டும் கவனம் செலுத்த வேண்டும். அனைத்து துறைகளும் சிறப்பாக செயல்பட வேண்டும் என்று முதல்வர் விரும்புகிறார். அதற்கு ஏற்ப அனைத்து துறைகளும் போட்டி போட்டுக் கொண்டு பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இத்தகைய மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தும் முதல்வர் அவர்களுக்கு பொதுமக்கள் என்றும் தொடர்ந்து தங்களது ஆதரவினை தர வேண்டும். இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் பேசினார்.*

*நிகழ்ச்சியில் திருப்பத்தூர் ஒன்றிய குழு தலைவர் எஸ். சண்முக வடிவேலு, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்பாலு முத்து, ஊராட்சி மன்ற தலைவர் சுப்பிரமணியம் பேரூராட்சி மன்ற தலைவர் கோகிலா ராணி நாராயணன், ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள். இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய கழகச் செயலாளர் விராமதி மாணிக்கம், பேரூர் கழகச் செயலாளர் ஆர்.கார்த்திகேயன்,மாவட்ட கவுன்சிலர் ரவி, மாவட்ட விவசாய அணி தலைவர் அருணாச்சலம், மாவட்ட அயலக அணி தலைவர் கேப்டன்சரவணன் நெசவாளர் அணி கண்ணன், பொருளாளர் ஏ.எம்.கண்ணன் ஆனமாவிலி ஊராட்சி மன்றதலைவர் செல்வராஜ். துணைத் தலைவர் சோமசுந்தரம், ஊராட்சிகழக செயலாளர் அ.கார்த்தி ஒன்றிய கவுன்சிலர்கள் சகாதேவன், ராஜேஸ்வரி, பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் சக்கரவர்த்தி மேலாண்மை குழு தலைவர் சிவகாமி விவசாய அணி சாமிகண்ணு நிர்வாகிகள் ராதா, பாண்டியன், சன் சீமான் சுப்பையா, முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர் மாணிக்கம், ராஜேஷ், புதூர் கண்ணன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், காளிமுத்து, ஷாஜகான், உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டார்கள். தலைமை ஆசிரியர் பாண்டி குமார் நன்றி கூறினார்.*

## மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க.

# மதுரை மாநகர் மாவட்ட கழக செயற்குழு கூட்டம்!

## மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவிப்பு!



மதுரை மாநகர் மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் நாளை (31.08.2023 - வியாழக்கிழமை) மாலை 6.00மணி அளவில் பசுமலை கோபால்சாமி திருமண மண்டபத்தில் நடைபெற இருப்பதால் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்ட கழக செயலாளர்கள், ஒன்றிய, பேரூர், கிளை கழக செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

**பொருள்:** கழக இளைஞர் அணி செயலாளர் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மதுரை வருகை குறித்து.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா.

சேலம் இளைஞர் அணி மாநாடு.

**கோ.தளபதி எம்.எல்.ஏ.,**
செயலாளர்
மதுரை மாநகர் மாவட்ட தி,மு,க.

# விருதுநகர் வடக்கு மாவட்டக் கழகத்தினருக்கு வேண்டுகோள்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவிப்பு!

இராமநாதபுரம் மாவட்டக் கழக செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் முத்துராமலிங்கம் அவர்களது தந்தையும், முன்னாள் கழக சொத்துப் பாதுகாப்புக் குழு உறுப்பினருமான திரு.காதர்பாட்ஷா (எ) வெள்ளைச்சாமி அவர்களின் 12 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு விருதுநகர் வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பாக நாளை (31.08.2023 ) காலை 10.00 மணியளவில் அவரது நினைவிடத்தில் மலரஞ்சலி செய்யப்பட உள்ளது.

அதுசமயம் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள் / நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் - தங்கம் தென்னரசு**
செயலாளர்
விருதுநகர் வடக்கு மாவட்ட தி,மு,க.

## உப்பிலியாபுரம் ஒன்றிய முன்னாள் செயலாளர்

# அர.நடராஜனின் புதல்வர் அர.ந.அரவிந்தன் மறைவு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக. 30-

உப்பிலியாபுரம், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவரும், முன்னாள் ஒன்றியச் செயலாளருமான பச்சப் பெருமாள்பட்டி அர.நடராஜனின் இரண்டாவது மகனும் உப்பிலியாபுரம் பி.சந்திரசேகரனின் மருமகனும் உப்பிலியாபுரம் தெற்கு ஒன்றியச் செயலாளர் அர.ந.அசோகனின் அண்ணனுமாகிய அர.ந.அரவிந்தன் நேற்று முன்தினம் (28.8.2023 - திங்கட்கிழமை) மாலை மூன்று மணிக்கு இயற்கை எய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.



திருப்பத்தூர் மாவட்டம், ஏலகிரிமலை, அத்தனாவூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழாவில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும் ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டியை வழங்கி சிறப்புரை நிகழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் முதன்மை கல்வி அலுவலர் முனிசுப்புராயன், ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றிய செயலாளர் கவிதாதண்டபாணி, மாவட்ட பிரதிநிதி பொன்னுரங்கம், ஒன்றிய கவுன்சிலர் லட்சுமி செந்தில்குமார், ஊராட்சிமன்ற தலைவர் ராஜஸ்ரீ, ஊராட்சிமன்ற து.தலைவர் திருமால், வார்டு உறுப்பினர்கள் தனலட்சுமிசங்கர், ராஜ்குமார், காளி முனிரத்தினம், ஜெயராமன், கோவிந்தசாமி, ரவி, முருகன், அருண்பாண்டியன், தங்கவேல், சிலம்பரசன், குட்டி மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பள்ளி ஆசிரியர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.


ஆகஸ்ட் 31,
திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு
அரசு வளர்ச்சி பணிகள் ஆய்வுக்கு
வருகை தரும்...
கழக இளைஞர் அணி
செயலாளரே!
வருக..! வருக..!!
திருத்தணி எஸ்.சந்திரன் B.A., LLB., MLA.,
திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச்செயலாளர்
திருத்தணி சட்டமன்ற உறுப்பினர்
அன்புடன்
Dr.VCR.குமரன் BAMS.,
மாவட்ட கழக துணை செயலாளர்
திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

# திராவிடப் போராளிகள்

32

■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

“ஏ! சகோதரர்களே! நாங்கள் துஷ்ட மிருகங்களல்ல; எங்களுக்காக நீங்கள் அஞ்ச வேண்டாம். நாங்களும் உங்களைப்போல் மனிதர்கள்தான். நாங்கள் உங்களுக்குத் தீங்கிழைக்க முற்படோம். உங்களுடைய சுதந்திரத்தைக் கொள்ளை கொள்ளோம்! உங்கள் சகோதரிகளாகிய எங்களின் பரிதாபத்தை மிஸ் மேயோ எடுத்தறிவித்தவைகள் உங்களின் நெஞ்சத்தில் பதியவில்லையா? உங்களுடன் பிறந்த நாங்கள் உங்களுக்கு இன்னும் எத்தனை வருஷம் அடிமைப்பட்டிருப்பது? இனிமேலாகிலும் எம்மீது இரக்கங்கொண்டு எமது வர்க்கத்தினர்களாகிய பெண்களின் விடுதலைக்கு உழைக்க முன் வருவீர்களாகில் உங்களுக்கு விடுதலை தானாகவே கிட்டும்!” - என்று ஆண்கள் விடுதலைக்கும் வழிகாட்டும் சிந்தனையை, -7.10.1928 ’குடிஅரசு’ இதழில் ‘எமது விடுதலைக்கு இறங்காததேனோ!’ என்ற தலைப்பில் எழுதினார் பினாங்கு ஸ்ரீமதி ஜானகி அம்மாள்.

## மிஸ் மேயோ கண்ட இந்தியா

அதே கட்டுரையில் பழம் பெருமை பற்றி, “மிஸ் மேயோ நம் நாட்டினர்களை ஏதோ குறை கூறிவிட்டதாகக் கருதி எமது நாடு கண்ணகி பிறந்த நாடு, மாதவி பிறந்த நாடு, வள்ளி பிறந்த நாடு! சாவித்திரி பிறந்தநாடு! இன்னும் எத்தனையோ. பதிவிரதா சிரோன்மணிகள் பிறந்த நன்நாடு!” என்றும் இந்நாட்டை குறைகூறி விட்டாள் என்றும் கூக்குரல் போட மட்டிலும் அனேக வைதீக வீரர்கள் கிளம்பி விட்டார்கள்.......” என்று எழுதினார்.

பினாங்கு ஜானகி அம்மாளின் கட்டுரையில் குறிப்பிட்டுள்ள மிஸ் மேயோ என்பவர் ஒரு அமெரிக்கப் பெண்மணி. அவர் 1927-ஆம் ஆண்டு ‘மதர் இந்தியா’ என்ற நூலை வெளியிட்டார். அந்த நூலில், தான் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்தபோது கண்ட அதிர்ச்சியூட்டும் மூடத்தனங்களையும் பெண்களுக்கு இழைக்கப்பட்ட இரக்கமற்ற கொடுமைகளையும், தான் கண்டவாறே பதிவு செய்துவிட்டார்.

‘இவள் யார் இதை எழுதுவதற்கு’ இந்தியாவில் நல்லவைகளே நடக்கவில்லையா...? என்ற கேள்விகளைத்தான் காந்தியார் முதல் கடைசித் தேசியவாதிவரை கேட்டுக் கொண்டிருந்தார்கள். தந்தை பெரியார் மட்டும்தான் ‘மேயோ கூற்று மெய்தானே, அவர் கூறிய கொடுமைகளை வைதீகத்தின் பெயரால் செய்து கொண்டுதானே இருக்கிறீர்கள். அதற்குத் தீர்வு எங்கே?’ என்று கேட்டார். பினாங்கு ஜானகியோ தன் ஒவ்வொரு கட்டுரையிலும் மிஸ் மேயோவைக் குறிப்பிட்டார்.

ஓவியம் : ரவி பேலட்



# பினாங்கின் கொள்கைக் கோமகள் ஜானகி அம்மையார்

## சாதியை எதிர்த்த சுயசிந்தனை

ஒரு சிறிய கட்டுரையில், தீப்பொறிகளாய்த் தெறித்து விழும் எண்ணற்ற கருத்துகள் எழுதிய பினாங்கு ஜானகி அம்மாள் யார்?

தஞ்சையைப் பூர்வீகமாகக் கொண்டு மலேசிய நாட்டின் பினாங்கு மாநிலத்தில் வணிகம் செய்த கலியபெருமாள் என்பவரின் மகள்தான் ஜானகி. பெண்களுக்குக் கல்வி அவசியம் என்ற சிந்தனை கொண்டவரான கலியபெருமாள், தன் மகள் ஜானகியைப் பள்ளிக்கு அனுப்பிப் படிக்க வைத்தார்.

பள்ளிப் படிப்பும் சுயசிந்தனையும் ஜானகியின் மனதில் சுயமரியாதையை விதைத்தன. சமூகக் கேடுகளைப் பற்றியும், பெண்ணடிமைக் கொடுமைகளைப் பற்றியும், அதற்கு சாதியும் மதமும் நாடும் பண்பாடும் எப்படிக் காரணமாகின்றன என்றும் உணர்ந்த ஜானகி அம்மையாரை சுயமரியாதை இயக்கமும் ‘குடிஅரசு’ ஏடும் ஈர்த்ததில் வியப்பில்லை.

## தடைகளை உடைத்த காதல்

இப்படி ஓர் அறிவும் தெளிவும் துணிவும் கொண்ட ஜானகி மீது சுயமரியாதைக்காரரான அப்பாவு காதல் கொண்டார். ஆனால், சாதி எனும் நெடுஞ்சுவர் குறுக்கே இருந்தது. ஜானகியின் தந்தை ஒரு வைதீக சமூகத்தவர். பண்டிதர் அப்பாவு மருத்துவர் சமூகத்தவர். சாதி உருவாக்கிய தடைகளை அப்பாவு பண்டிதர் எழுதிய காதல் கடிதங்கள் உடைத்துவிட்டன.

எதிர்ப்புகளை மீறி நடந்த அவர்களது சுயமரியாதைத் திருமணத்தை டாக்டர் கே.என். மேனன் முன்னிலையில் நடத்தி வைத்தவர் ஈப்போ இந்து மகாசன சங்க காரியதரிசியான அய்யாரு அவர்கள்.

17.2.1929 ‘குடிஅரசு’ இதழில் சுயமரியாதைத் திருமணம் என்ற தலைப்பில் பினாங்கு ஜானகியின் திருமணச் செய்தி வெளியிடப் பட்டுள்ளது.

“மணமேடை மீது ஸ்ரீமதி நாயக்கரின் திரு உருவப்படம் மலர் மாலையால் அலங்கரிக்கப்பட்டு மணமக்களை ஆசீர்வதிக்கும் பாவனையாய் மணமேடை மீது தொங்கவிடப்பட்டிருந்தது. மணமக்கள் சுதேசி உடையுடன் துலங்கினர்.

திருமணத்தில் 12 வயதுள்ள மகாலிங்கம் என்னும் சிறுவன் இனிய சாரீரத்துடன்,

‘வாழ்க வைக்கம் வீரன் வாழ்க வாழ்க
வாழ்கவே!
வாழ்க! வைதீகம் வீழ்க வீழ்கவே!
எட்டுத்திக்கும் தன்மதிப்பு பற்றி எழுகவே!
ஏழை மக்களைக் கெடுக்கும் வேதம் ஒழியவே!
நாட்டுப் பெண்கள் பட்ட துன்பம்
ஓட்டமெடுக்கவே!
நயவஞ்சகக்காரப் பார்ப்பான் நைந்து சாகவே!’
என்ற வாழ்த்துப் பாடலைப் பாடினான்.

‘மருத்துவனுக்கு’ ரூ.5-ம் குடிஅரசுக்கு ரூ. 3-ம், திராவிடனுக்கு ரூ. 3-ம் நன்கொடை அளிக்கப்பட்டன“.

## ஜானகி எங்கே?

1929-ஆம் ஆண்டு டிசம்பர் 15-ஆம் தேதி தந்தை பெரியார், மலேயா (மலேசியா) நாட்டின் ஈப்போ நகரில் நடைபெற்ற தமிழர் சீர்திருத்த சங்க மாநாட்டுக்குச் சிறப்புரை ஆற்றச் சென்றிருந்தார். அவருடன் நாகம்மையார், எஸ்.ராமநாதன், அ.பொன்னம்பலனார், சாமி சிதம்பரனார், சி.நடராஜன் ஆகிய தோழர்களும் சென்றனர். அவரை வரவேற்க சுமார் 50 ஆயிரம் தமிழர்கள் பினாங்கில் கூடினர். ஆனால், தந்தை பெரியாரும் அன்னை நாகம்மையாரும் ‘ஜானகி அம்மாள் எங்கே?’ என்று கேட்டார்கள்.

அவர் பிரசவத்துக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார் என்று கேள்விப்பட்டவுடன், ‘சரி, கவலைப்பட வேண்டாம்; நாங்கள் சிங்கப்பூர் பயணம் முடித்து வந்து பார்க்கிறோம்’ என்று கூறிவிட்டு பயணத்தைத் தொடர்ந்தார்கள். அதேபோல் அவர்கள் திரும்பி வருவதற்குள் ஜானகி அம்மாளுக்கு ஆண் குழந்தை பிறந்திருந்தது. அந்தக் குழந்தைக்கு **‘சமரசம்’** என்று பெயர் சூட்டப்பட்டது.

**சிறப்பான பிரச்சாரப் பயணத்தின் கடைசி நாளில் ஜானகி அம்மாள் குழந்தையுடன் விழாவுக்கு வந்துவிட்டார்.**

எத்தனையோ எதிர்ப்புகளுக்கிடையில் நடந்த சிறப்பான பிரச்சாரப் பயணத்தின் கடைசி நாளில் ஜானகி அம்மாள் குழந்தையுடன் விழாவுக்கு வந்துவிட்டார்.


பண்டிதர் அப்பாவு - ஜானகி அம்மாள் இருவருக்கும் ஒரு மகள், மூன்று மகன்கள் என நான்கு பிள்ளைகள் பிறந்தனர். மூத்த மகன் பெயர் சமரசம், அடுத்த மகள் பெயர் சமதர்மம், மூன்றாவது மகன் பெயர் ராஜாராம் மோகன்ராய், கடைசி மகன் பெயர் சன்யாட் சென்.

இப்படிக் கொள்கைப் பெயர்களை வைத்ததாலும் சில பிரச்சினைகளை ஜானகியும் அப்பாவு பண்டிதரும் எதிர்கொள்ள வேண்டி இருந்தது.

(வருவார்கள்...)

---

## சென்னை என்கிற தலைநகரம்!




அரசியல், பொருளாதாரத்தில் மட்டுமல்ல, விளையாட்டுத் துறையிலும் தமிழ்நாடுதான் இந்தியாவுக்கே முன்னோடியாக இருக்கிறது, என்பதை செஸ் விளையாட்டுப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

தமிழ்நாடு அரசு விளையாட்டுத் துறையில், புதிய உத்வேகத்துடன் கவனம் செலுத்தி வரும் நிலையில், செஸ் ஒலிம்பியாட் போட்டியை நடத்தி சர்வதேச அளவிலும் கவனத்தை ஈர்த்தது.

நமது விஸ்வநாதன் ஆனந்த் உலக அளவில் சாம்பியனாக விளங்கியவர். தவிர, இந்திய அளவில் 25-க்கும் மேற்பட்ட கிராண்ட் மாஸ்டர்கள் தமிழ்நாட்டில் உருவாகி உள்ளனர்.

இந்தியாவில் சுமார் 65 கிராண்ட் மாஸ்டர்கள் என்றால், அதில் மூன்றில் ஒரு பங்கு சாதனையாளர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்.

சமீபத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரக்ஞானந்தா செஸ் சாம்பியன் இறுதிப் போட்டியில் வெள்ளி வென்றதன் மூலம் தமிழ்நாட்டில் செஸ் விளையாட்டில் மேலும் ஒரு அலை உருவாகும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

சென்னை தமிழ்நாட்டின் தலைநகரம் மட்டுமல்ல, பல துறைகளுக்கான தலைநகரங்களின் பட்டியலில் செஸ் விளையாட்டும் சேர்ந்துள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



### வரைபடமும் புகைப்படமும்!

கழகம் தேர்தலில் வென்று, தலைவர் கலைஞர் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற 1989-ஆம் ஆண்டு, இன்றைய முதலமைச்சரும் அன்றைய இளைஞர் அணி செயலாளருமான தளபதி அவர்கள், எங்கள் பகுதிக்குக் கொடியேற்றி வைக்க வருகை தந்திருந்தார். எங்கள் பகுதியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் தளபதி கொடியேற்றி வைத்தார். அப்போது வல்லம் பேரூரின் திட்ட வரைபடத்தையும் திறந்து வைத்து அவர் சிறப்புரையாற்றினார். அச்சமயத்தில் பேரூர் இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த நான் அவருடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. முன்னாள் ஒன்றிய தலைவர் இர.கோபாலகிருஷ்ணன், முன்னாள் தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம் மற்றும் காயிதே மில்லத் ஆகியோர் உடனுள்ளனர்.



அண்ணாத்துரை

**-த.அண்ணாத்துரை,**
**பேரூர் இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர், வல்லம் பேரூர் கழகம், தஞ்சாவூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப் படங்களை சிறுகுறிப்புடன் எங்க ளுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### கண்டிப்பான தலைவர்!

**1969-ஆம் ஆண்டு, கலைஞர் முதலமைச்சராக ஆனபோது, ‘ஸ்டேட்ஸ்மேன்’ ஆங்கிலப் பத்திரிகை எழுதியது “கலைஞரை சட்டசபைக் கட்சித் தலைவராகத் தேர்தெடுத்ததன் மூலம், தி.மு.கழகம் ஒரு பலசாலிக்குப் பின்னால் ஒன்று சேர்ந்து நிற்க வேண்டுமென்பதில் உள்ள அக்கறையைக் காட்டிக் கொண்டிருக்கிறது. கண்டிப்புக்கும், கட்டுப்பாட்டை நிலை நாட்டுவதற்கும் பெயர் பெற்றவர். ஒரு மகத்தான தலைவரை இழந்து நிற்கும் இந்த நேரத்தில், மிகச் சோதனையான நேரத்தில், அக்கட்சிக்கு இத்தகையத் தலைவர் தேவையானதே என்று டெல்லி வட்டாரத்தில் உணரப்படுகிறது” எனக் கலைஞரைப் புகழ்ந்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

225




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131